

# திருக்கோயில்

பிப்ரவரி 1993 விலை ரூ. 3





மயிலை அருள்மிகு திருவள்ளுவர் திருநாள் விழா 15 1.93 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திருமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி, எம்.ஏ.,பி.எல் அவர்கள் இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்புரையாற்றினார்கள். சென்னை மாவட்ட திருக்கோயில் நிர்வாக வாரியத்தலைவரும் மயிலை சட்டமன்ற உறுப்பினருமான திருமிகு டி. எம். ரங்கராஜன், எம்.ஏ.பி.எல். அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள்.

முகப்பு:
சுவாமிமலை
அருள்மிகு சுவாமிநாத சுவாமி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,P.hD.

மாலை: 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆங்கீரச ஆண்டு மாசி பிப்ரவரி 1993 விலை ரூ. 3-00 | மணி: 2

திருக்கோயில் வாசகர்களுக்கு
அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

ஆடல் காணீரோ, திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
— பேராசிரியை திருமதி சுமதி குமாரசுவாமி

வள்ளுவர் காட்டிய பாதை
— கலைமாமணி திருக்குறளார் வீ முனுசாமி

சித்திரபாரதம்
— செவ்வேள்

முருகப்பெருமான் வணக்கம்
— தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கனார்

தில்லைத் திருக்கூத்து
— ஜி. கமலா

திருப்புகலூர் திருத்தல மகிமை
— புலவர் திருக்கண்ணபுர சுப்பிரமணியன்

நாட்காலப் பூசையும் விழாக்காலப் பூசையும்
— டாக்டர் பொற்கோ

கீதைக் குறள்கள்
— அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

விநாயகப் பெருமான் வணக்கம்
— தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கனார்

எல்லாமாக இருப்பவர்
— டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி

அஷ்டலட்சுமியர் அருள்பெறுவோம்
— டத்மப்பிரியா

அடியார்க்கும் அடியராம் சுந்தரமூர்த்தி நாயனார் அருள் வரலாறு
— அன்பு அருணாசல அடிமை

நெஞ்செல்லாம் நெடுமாலே
— 'சரயு'

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு






கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன் [25]**

வரகுண பாண்டியன் மதுரையை அரசாட்சி செய்யுங் காலத்தில் வடதேசத்தில் இருந்து ஏமநாதன் என்ற யாழ்வாசிப்போன் ஒருவன் வந்து பாண்டியன் சபையில் இசை விருந்தளித்தான். கலைக்கு ஆதரவளிக்கும் முறையில் பாண்டியன் அவனுக்குச் சன்மானமளித்து கௌரவித்தான்... பாண்டியனின் பரிசு கிடைத்ததாலும், தனது இசை நன்கு அமைந்திருந்ததாலும் இறுமாப்புக் கொண்ட ஏமநாதன். பாண்டிய தேசத்திலேயே தன்னைப் போல் பாடுவதற்கு ஒருவருமே யில்லை என எண்ணினான். இச்செய்தியறிந்த டாண்டியன் மதுரையிலுள்ள பாணபத்திரன் என்ற இசை வல்லோனை யழைத்து ''நீ ஏமநாதனுடன் போட்டியிட்டுப் பாட முடியுமா?'' எனக் கேட்க, 'அரசே! கூடல் நாயகனான சிவபெருமானுடைய அருளாலும் தங்கள் அன்பான ஆசீர்வாதத்தாலும் ஏமநாதனை வென்று விடுவேன்'' எனக் கூற மன்னவன் மறுநாள் போட்டி வைப்பதாகக் கூறி பாணபத்திரனை வீட்டிற்கு அனுப்பினான்.

அரசனிடம் விடைபெற்று வீடு திரும்பும் போது ஏமநாதனின் சீடர்கள் கடைவீதி, ஊருக்கு நடுவிலுள்ள மரத்தடி முதலான இடங்களில் பாடுவதைக் கேட்டு, அவர்களது இசை மிக நன்றாக இருப்பதை யறிந்து, ஏமநாதனைக் தன்னால் வெல்ல முடியுமா எனச் சிறிது கவலையடைந்து மதுரை நாயகனின் ஆலயத்தை அடைந்து ''இறைவனே''! ஏமநாதனை வெல்லுவதற்கு நீதான் துணை செய்ய வேண்டும்'' எனக் குறையைத் தீர்க்க வேண்டிக் கொண்டு தன் வீட்டை வந்தடைந்தான்.

தன்னிடம் முறையிட்ட பாணபத்திரனின் குறையை நீக்க எண்ணிய ஆலவாயப்பன் ஒரு விறகாளாகத் தோன்றினார். அழுக்கான கந்தை ஒன்றை அணிந்து, திருவடிகளில் பழைய செருப்பும், விறகு சுமந்து சுமந்து அழுநதிய திருமுடியும் உடையவராகத் தோன்னார். கேட்டவர்களுக்கு அதிக விலை கூறி, சுமையை எடுத்துக் கீழே வைத்து விட்டு, மீண்டும் ஊருக்குள் சுமையுடன் புகுந்தார். மாலை நேரம் வந்தது, மீனாட்சி அம்மையார் தனது சந்திரன் போன்ற முகத்தின் நெற்றியில் முயற்கறைபோலத் திலகமிட்டு, செவ்வாடையுமான பட்டாடையும் இருளான கூந்தலும் நட்சத்திரங்களான ஆரமும் அணிந்து தனது நாதனான சிவபெருமானைத் தேடி வந்தாளோ என்னும்படி வந்தது மாலை.

''திங்கள் வாணுதல் முயற்கறைத் திலகமும்;
சிவந்த
மங்குல் ஆடையும் மயங்கிருள் ஓதியும்
வான்மீன்
பொங்கும் ஆரமும் பொலிந்து தன்
கொண்கனைப் பொருப்பன்
மங்கை தேடி வந்தாள் என வந்தது மாலை.''

அவ்வாறு மாலையில் வந்த இறைவன், ஏமநாதன் வீட்டுத் திண்ணையில் தனது விறகு சுமையை இறக்கி வைத்து, இளைப்பாறி கொண்டே பாடலானார். அவ்விசையைக் கேட்ட ஏமநாதன் வெளியில் வந்து, விறகாளை ''நீ யார்? என்றான், . உலகத்தை எல்லாம் தனக்கு அடிமையாகக் கொண்ட பெருமான் ''நான் இவ்வூரிலுள்ள பாணபத்திரன் என்பவரின் அடிமை''. எனக் கூறி பாணபத்திரனிடம்



## அடுத்த இதழில்...

திருமந்திரச் செம்மல்
அருளாளர், தமிழக அரசின்
தலைமைச் செயலாளர்
திருமிகு டி. வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்.
அவர்களின்
''அருளாளர்களின் அருள் உள்ளம்''
அடுத்த இதழ் முதல் தொடர்ந்து
வெளிவரும் எனத்
தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இசை பயிலச் சென்றேன். வயது முதிர்ந்த உனக்கு இனி இசை வராது என்று என்னைத் தள்ளிவிட்டார்'' என்றார்.

''கனியிசைக் கிழவன் தன் கீழ்க் கற்பவர்
அனேகர் தம்முள்
தனியிசைக் கிழமை வேட்டு நானும் அவ்வினை
ஞனானேன்
தனியிசைக் கிழவன் நோக்கித் தசை யெலாம்
ஒடுங்க மூத்தாய்
இனியிசைக் கிழமைக்காகாய் என்றெனைத்
தள்ளி விட்டான்''

இதுகேட்ட ஏமநாதன் ''மீண்டும் ஒருமுறை பாடுக'' என்றான். விறகாள் தனது கையிலிருந்த யாழை முறுக்கிச் சுருதி கூட்டிபாடும்போது வயிறுகுழிதல், அழுமுகம் காட்டல், புருவம் ஏறி இறங்குதல், தலைநடுக்கம் பல்லைக் காட்டுதல் முதலான குற்றங்கள் இல்லாது அசையாது இருந்தது போலிருந்து பாடினார். 'பிரமனால் அறிய முடியாத இறைவன் மதுரை புகுந்தார். மதுரை புகுந்த பெருமான் என் மனத்திலும் புகுந்தார். வேதத்தினால் அறிய முடியாத இறைவன்கூடல் புகுந்தது போல் என் உள்ளமும் புகுந்தார். நீல வண்ணனான நெடுமாலுக்கும் அகப்படாத பெருமான் ஆலவாயில் அமர்ந்தான். ஆலவாய் போல் என் உளமும் புகுந்தான்'' எனப் பாடினார். உலகமும் இறைவனது இசையில் மயங்கியது. தாமரையிலிருந்த பிரமன் சிவபெருமானின் பாதத் தாமரையை அடைந்த மாதிரி மகிழ்ந்தான். கடலில் கண் வளர்ந்த கரிய திருமால் ஆனந்தக் கடலில் மூழ்கினான். தேவேந்திரன் மட்டும் ''அகலியைத் தீண்டியதற்காக உடல் பூராவும் கண்ணுறுமாறு சபித்த கௌதமர், உடம்பெல்லாம் செவிகளாக இருக்கும்படி சபித்திருந்தால் நான் இந்த இனிய இசையை மேலும் நன்கு அனுபவித்திருப்பேன்!'' என ஏங்கினான்.

''போதுளான் பரமன் பாதப் போது
ளானான் வேலை
மீதுளான் பரமானந்த வேலை மீதுளானான்
தாதுளாம் கமலக் கண்போல் சதமகன்
உடலமெல்லாம்
காதுளேன் அல்லேன் என்றான் கண்ணுளான்
கானம்கேட்டு''

ஏமநாதனும் இசையில் மயங்கியிருக்க விறகாளாக வந்தவர் மறைந்தருளினார். ஏமநாதன் ''என்ன தேவகானம்! பாணபத்திரனால் தள்ளப்பட்ட ஒருவனது இசையே இவ்வாறு இனிமையாக இருக்கிறதென்றால் பாணபத்திரன் எப்படிப் பாடுவானோ?'' என எண்ணி இரவோடு இரவாக ஊரை விட்டே ஓடிவிட்டான். அன்று துயிலும் பாணபத்திரன் கனவில் இறைவன் தோன்றி ''பாண பத்திர! இன்று விறகுத் தலையன் வேடத்தில் ஏமநாதனிடம் சென்று நான் பாணபத்திரனின் அடிமை எனக் கூறி ஏமநாதனை விரட்டிவிட்டேன்'' எனக் கூறத் திடுக்கிட்டெழுந்த பாணபத்திரன் ''இறைவனே! காட்டில் புகுந்தனையா? கட்டை வெட்டினையா? முடியில் சுமந்தனையா? திருவடி நோவ நடந்து வந்து இந்த ஏழையின் அடிமை என்றாயா? நான் என் கவலையை உன்னிடம் கூறியதால் பெரிய அபசாரத்திற்கு ஆளானேனே'' என அலறினான்.

''கடியகானம் புகுதவோ? கட்டிய விறகை
முடியில் ஏற்றவோ? முண்டகத்தாள்
நொந்திடவந்து

## அறநிலையத்துறை ஆணையாளர்

**தமிழக அரசின் செய்தி-மற்றும் சுற்றுலாத்துறை செயலர் திருமதி சி. கே. கரியாலி, ஐ.ஏ.எஸ்., அவர்கள் 5-2-93 முதல் அறநிலையத்துறையின் ஆணையாளராகக் கூடுதல்பொறுப்பினை ஏற்றுள்ளார்கள்.**



**டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் ''கந்தவேள் கருணை'' அடுத்த இதழ் முதல் தொடர்ந்து வெளிவரும்.**

---

அடியேன் பொருட்டு அடாத சொற்பகரவோ? வஞ்சக்
கொடியனேன் குறையிரந்தவா விளைந்ததே குற்றம்''

பொழுது விடிந்தது. பாண பத்திரன் பாண்டியயன் சபையை அடைந்தான். பாண்டியன் ஏமநாதனை அழைத்துவர ஆட்களை அனுப்ப ஏமநாதன் ஓடிவிட்டான் என்பதையும் இறைவனே விறகாளாக வந்த விவரங்களையும் அறிந்த பாண்டியன் ''பாணபத்திர! இறைவனே உனக்கு அடிமை எனக் கூறினால் நாங்கள் யாவரும் உனக்கு அடிமை! இனி நீ இறைவனின் கோயிலில்தான் பாட வேண்டும்!'' எனக் கூறி, பாணபத்திரனுக்கு வரிசைகள் செய்து அனுப்பினான்.

அன்று முதல் இறைவனது கோயிலையடைந்து பாணபத்திரன் பாடலானான். வேறு தொழில் இல்லாததால் வாடினான். இறைவன் பாண்டியனது பொக்கிஷத்திலிருந்து பொன் காசு, பொன் ஆடை, தங்கத் தகடு முதலானவற்றைக் கொண்டு வந்து கொடுத்தார். சிறிது நாட்களில் அதுவும் நின்றது. இறைவன் பாணபத்திரனின் கனவில் தோன்றி ''பாணபத்திர! இன்று வரை பாண்டியனது பொக்கிஷத்திலிருந்து உனக்குப் பொருள் கொண்டு வந்து கொடுத்தேன். இனி அவன் அறிந்தால் தடுமாறுவான் .காவலாளிகள் துன்புறுத்தப்படுவர். ஆதலின் சேரராசனுக்கு ஒரு கடிதம் கொடுக்கிறேன். அவனிடம் சென்று பொருள் பெற்று நன்கு வாழ்வாயாக! என்றனர்.

கடிதம் எழுதுதல் ஒரு கலை. உலகத்திலேயே முதல கடிதம் சோமசுந்தரப் பெருமான் தான் எழுதினார்,


''ஒளி வீசும் தண்மாடங்கள் நிறைந்த மதுரைப் பதியில் வாழும் சிவன்என்னும் நாம்'' யாரிடமிருந்து வந்துள்ள கடிதம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது இச்சொற்கள். ''வந்தவர்கட்கு வரையாது மேகம் போல் வாரி வழங்கும் சேரராசன் காண்க'' இன்னவருக்கு எழுதப் பட்டுள்ளது எனும் குறிப்பு ''இக்கடிதம் கொண்டு வரும் வினை வல்லோர் உன்போல் என் மீது அன்புடையவர் . .உன்னிடம் வருகிறார். பொருள் கொடுத்து அனுப்ப வேண்டியது'' என்பது செய்தி,

சேரமானுக்குத் தன் மீதுள்ள பக்தியை இறைவன் ஒப்புக் கௌள்ளுவதாக தொனிப் பொருள். ''பாணபத்திரன் கேட்கமாட்டார் நீயாகவே கொடுப்பாயாக'' என்பது புலவர்கள் எவரிடமும் கை நீட்டி யாசிக்க மாட்டார்கள் என்பது குறித்துக் காட்டப் பெறுகிறது. நல்ல இசைப் டயிற்சியுடைய பாணடத்திரனை அவனது இசையின் பெருமை யறிந்து தன்னிடமே நிறுத்திக் கொள்ளாமல் மதுரைக்குத் திருப்பியனுப்புக! எனக்கட்டளையும் தொனிக்கிறது. அவ்வழகிய கடிதத்தின் முழுவாசகம் இதோ:—

''மதிமலி புரிசை மாடக் கூடல் .
பதிமிசை நிலவும் பால் நிற வரிச்சிறகு
அன்னம் பயில் பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன் யான் மொழி தரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமாமதிபுரை குலவிய குடைக்கீழ்
செருமாவுகைக்கும் சேரலன் காண்க.
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே''

இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு பாணபத்திரன் சேரநாடு சென்று திருவஞ்சைக்களம் எனும் ஊரையடைந்தான். இதற்குள் சிவபெருமான் சேரன் கனவில் தோனறித். தனது ஓலையுடன் பாணபத்திரன் வருவது பற்றித் தெரிவிக்க, மகிழ்ச்சியடைந்த சேர மகராசன் தனது சேனையுடன் பத்திரனை எதிர்கொண்டழைத்து, அத்திருவோலையை யானை மீது வைத்து ஊர்வலம் விட்டான். பின் தனது பொக்கிஷத்தைத் திறந்து ''பாணபத்திரரே! விரும்பியவரை எடுத்துக்கொள்ளுக'' எனக்கூற ''தாங்கள் கொடுப்பதே போதும்'' எனப் பத்திரன் கூற பொருள் பெற்ற பாணபத்திரன் மதுரை திரும்பினான். சேரனது பக்தி நிறைந்த தாராள மனமும், பத்திரனின் பக்தியுடன் ஆசையற்ற மனமும் காட்டப் பெறுகிறது. சேரனிடம் விடை பெற்ற பாணபத்திரன் மதுரையில் சிறப்பாக வாழ்ந்தான்.

—(தொடரும்)





**பேராசிரியை திருமதி சுமதி குமாரசாமி**
துணை இயக்குநர், (செவிலியல்)
மருத்துவக்கல்வி இயக்ககம், சென்னை-600005.


சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தில் திருநீலகண்ட நாயனார் புராணம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. திருநீலகண்ட நாயனார் தில்லையம்பதியில் குயவர் குலத்தில் அவதரித்தார். அவர் இறைவனிடத்து மிகவும் பக்தி மிக்கவர். சிவபெருமான் மேல் மிக்க அன்புகொண்டு 'திருநீலகண்டம்' 'திருநீலகண்டம்' என்று கூறி இறைவனை வழிபட்டு சிவத்தொண்டு புரிந்து வந்தார். அதனால் அவரை மக்கள் 'திருநீலகண்டர்' என்று அழைத்தனர். அவர் சிவனடியார்களுக்கு திருவோடு (மட்கலம்) அளிக்கும் பணியை மேற்கொண்டு வந்தார். அவரது மனைவியரும் ''அருந்ததிக் கற்பின் மிக்கார்'' ஆவார். திருநீல்கண்டர் பொய்கடிந்து அறத்திங் வாழ்வார்'' ஆவார். அவர் பொய்மையை நீக்கி அறத்தின் வழி வாழ்ந்து வந்தார் என்று இயம்புகிறது பெரியபுராணம். திருநீலகண்டர் ஒரு நாள் சிற்றின்ப விருப்பம் கொண்டு ஒரு பரத்தையர் வீடு சென்று வந்தார். அதனை அறிந்த அவர் தம் மனைவியார் திருநீலகண்டர் அவரை மெய்யுற அணையும் போதில் ''தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்'' என்றார். ஆணை இட்டது மனைவி. ஆனால் இட்ட ஆணை திருநீலகண்டர் மீது இடப்பட்ட ஆணை; இடைவிடாது தியானம் செய்து திருநீலகண்டத்தின் மீது இடப்பட்ட ஆணை அல்லவா! ஆகையினால் சிவபெருமான் மீது தாம் கொண்ட பக்தியை நினைத்து மனைவி இட்ட ஆணை கேட்டு அஞ்சிப் பெயர்ந்து நீங்கினார் திருநீலகண்டனார்.

''எம்மை என்றதினால் மற்ற மாதரார் தம்மையும் என்தன் மனத்தினும் தீண்டேன்' என்று அப்பொழுது அவர் ஓர் உறுதி கொண்டார். அம்மையார், என்னை என்ற ஒருமையை நம்மை என்று புன்மையில் சொன்னதால், நாயனாரும் பன்மையாகவே கொண்டார். நாயனார் தான் செய்த தவற்றை உணர்ந்து அதனால் வருத்தமுற்று தண்டனையை மேற்கொள்ள மிகவேகமாக உணர்ச்சியின்பால் உந்தப்பட்டு, மற்ற ''மாதரார் தம்மையும் மனதிலும் தீண்டேன் என்றார்''. திருநீலகண்ட நாயனார் பரத்தையின் வீட்டிற்கு மழையின் காரணமாக சற்று ஒதுங்கி இருக்கச் சென்றார்; அவளும் அவ்வரைச் சிவனடியாராகப் போற்றிப் பூசித்து வழி அனுப்பினாள். எனவே அவர் சிற்றின்பத்தின்பால் செல்லவில்லை என்று நமக்கு விளக்கம் சொல்வாரும் உண்டு.

அவர் பரத்தையை நாடியதையும் அதன் பின் தன் மனைவியின் பால் சென்றதையும் அவர் மனைவியார் இட்ட ஆணையையும் திருநீலகண்டர் சபதத்தையும் கீழ்க்கண்ட பாடல்கள் மூலம் பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் தெளிவாகவே கூறியுள்ளார்.

''ஆனதால் கேள்வர் ஆங்கோர் பரத்தைபால்
அணைந்து நண்ண
மானமுன் பொறாது வந்தஊடலால் மனையின்
வாழ்க்கை
ஏனைய எல்லாஞ் செய்தே உடனுறை(வு)
இசையார் ஆனார்;
தேனலர் கமலப் போதில் திருவினும் உருவம்
மிக்கார்''

''மூண்டஅப் புலவிதீர்க்க அன்பனார் முன்பு
சென்று
பூண்டயங் கிளமென் சாயல் பொற்கொடி
அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி மெய்யுற அணையும்
போதில்
தீண்டுவீ ராயின் எம்மைத் திருநீலகண்டம்
என்றார்''

''ஆதியார் நீலகண்டத் தளவுதாங்கொண்ட
ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து
நீங்கி
ஏதிலார் போல நோக்கி, 'எம்மைஎன் றதனால்
மற்றை
மாதரார் தமையும் என்தன் மனத்தினும்
தீண்டேன் என்றார்''

இவ்வாறு ஊடல் ஏற்பட்ட நாள் முதலாக திருவினும் உருவமிக்க திருநீலகண்டரும், அவரது மனைவியாரும் கணவன் மனைவியராக ஒரே வீட்டில் வாழ்ந்தபோதும், தங்களுக்குள் வேறுவைகி அற்புறுபுணர்ச்சி இன்மை அயலறியாமை வாழ்ந்தனர். பிணக்கை மற்ற மக்கள் அறியாத வண்ணம் வாழ்ந்தனர். இவ்வாறு அவர்களது இளமைக்காலம் கடந்து போகிறது என்று குறிப்பிடுகின்றார் சேக்கிழார் பெருமான். இப்படியே இருவரும் முதுமைப்பருவம் எய்திவிடுகின்றனர். ஆயினும் அடியார்பணியை அவர்கள் குறைவின்றி செய்துவந்த சிறப்பே இங்கு நாம் போற்றுதற்குரியது.

இத்தகைய சிறப்புமிக்க இவ்விருவரையும் காணக் கயிலையிலிருந்து புறப்பட்டு இறைவனாரே சிவ்வேதியராகி வருகின்றார்.

'இந்நெறி ஒழுகும் நாளில் எரிதளிர்த்தென்ன நீண்ட
மின்னொளிர் சடையோர் தானுந் தொண்டரை விளக்கங்காண
நன்னெறி இதுவாம் என்று ஞாலத்தார் விரும்பி உய்யும்
அந்நெறி காட்டும் ஆற்றல் அருட்சிவ யோகியாகி''

''கீளொடு கோவணம் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனிமேல்
தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்
நீளொளி வளர்திரு மூண்ட நெற்றியும்''

''நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங்கதிர் முறுவல்வெண் ணிலவும் மேம்பட
இடும்பலிப் பாத்திரம் ஏந்து கையராய்
நடந்து வேட் கோவர்தம் மனையில் நண்ணினார்''

தொண்டரை விளக்கங்காண - அவர்தம் பெருமையை உலகுக்கு உணர்த்த மின்னொளிர்ச் சடையோன் ஆன சிவபெருமான் ஒரு சிவயோகி வடிவம் கொண்டு திருநீலகண்ட நாயனாரை அணுகியதைச் சேக்கிழார் பெருமான் வருணிக்கும் பாடல்கள்தாம் மேற்காண்பவை.


'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை' என்று

இயம்புகிறது திருக்குறள். ஆசையை விட்ட துறவிகளுக்கும், இல்வாழ்வோன் சிறந்த துணையாவான். திருநீலகண்ட நாயனார் அடியாரில் சிறந்த அடியார். அவர் மனைவியைத் தீண்டாததை அயலார் அறியாவண்ணம் சிறந்த இல்லற வாழ்க்கையும் வாழ்கின்றார். ஆசையை துறந்த சிவயோகியார் தமது வீடுதேடி வந்தவுடன் அவர் தம்மை எதிர்கொண்டு அழைத்து, அவருக்கு செய்ய வேண்டிய பூசைகளை நிறை பெருவிருப்போடு செய்து, ''யான் செய்யும் பணி எது?'' என்று வினவுகிறார். உம்பர் நாயகனும் ''இந்தத் திருவோட்டை நீ உன்னிடம் வைத்து இரு. நாம் வேண்டும்போது மீண்டும் தா'' என்று கூறுகிறார். திருவோட்டினைப் பற்றி இறைவனார் கூறும்போது ''தன்னை ஒப்பரியது; தலத்துத் தன்னுழைத் துன்னிய யாவையும் தூய்மை செய்வது; பொன்னினும்மணியினும் போற்றவேண்டுவது'' என்று கூறி நாயனாரிடம் திருஓட்டை கொடுக்க அவரும் அவ்வோட்டினைப் பெற்று பத்திரமாக ஓரிடத்து வைக்கிறார். இவ்வாறு திருவோட்டினைத் திருநீலகண்டரிடம் தந்து சென்ற சிவயோகிகள் சிலகாலங்கள் கழிந்தபின் மீண்டும் வந்து நாயனாரிடம் திருவோட்டினைக் கேட்கிறார். உடன் நாயனாரும் தான் முன்பு வைத்த இடத்தில் சென்று பார்க்க ஓடுமறைந்து விட்டிருக்கிறது. மறைத்தவர் யார்? இறைவனே. எல்லாம் தான் வைத்து வாங்க வல்லவன் இறைவனே அல்லவா!

நாயனார் ஓடு கொண்டு வந்து தராமல் காலம் தாழ்த்துவதை அறியும் சிவயோகியார்



''ஏன் தாமதம்''? என்று வினவுகிறார். நாயனார் ''என் பிழையைப் பொறுங்கள்; ஓட்டினைக் காணவில்லை. தங்களுக்குப் புதுஓடு ஒன்று தருகின்றேன்'' என்கிறார். 'பொன்னினால் அமைத்து தந்தாலும், என் ஓடுஅன்றி வேறு கொள்ளேன், என் ஓட்டைக் கொண்டு வா: போ'' என்று சிவயோகியார் கோபிக்கிறார். ''ஓட்டை நான் களவாடவில்லை. வைத்த இடத்தில் ஓடு காணவில்லை. நான் என்ன



***சிந்தாதிரிப்பேட்டை அருள்மிகு முருகவேள் திருக்கோயிலில் 1-1-93 புத்தாண்டை ஒட்டி நிறைமணிக் காட்சி சிறப்புற நிகழ்த்தப்பட்டது.***

செய்வேன்? நீரே உரையும்'' என நாயனார் புலம்ப, புண்ணிய பொருளான, கொடுமை இல்லாதவனான இறைவன் ''ஓடு தொலைந்தது உண்மையாயின் காதல் உன்மகன் கையினைப் பற்றிக்குளத்தில் மூழ்கிச் சத்தியம்செய்து தந்து போ'' என்கிறார். இறைவன் அறியாதது ஒன்றுமில்லை. அவருக்கு தெரியாதா? நாயனாருக்கு மகன் இல்லை என்பது. பின் ஏன் அப்படிக் கூறுகிறார்? அவர் கொடுமை செய்யாதவர், நாயனாருக்குப் பிறவாப் பெரும் பேரின்பம் அளிக்க வேண்டுமே! அளிக்கும் காலம் வந்துவிட்டது. அதனால்தான் திருநீலகண்ட நாயனாருக்கு வீடு பேற்றை அளிக்கவே இவ்வழக்கைத் தொடர்கிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொள்ள வந்த இறைவன் வழக்கு தொடர்ந்ததும் அன்பருக்கு அருள் செய்யவே அன்றோ! அன்று பார்த்தனுக்கு பாசுபதாஸ்தரம் அருள வேடனாக வந்து வழக்கு தொடர்ந்து பிறகு அஸ்திரத்தை வழங்கினார் அல்லவா!

திருவிளையாடல் புராணத்திலும் தம்மடியவர் தருமிக்காக இறைவன் தொடுத்த ஒரு சுவையான வழக்கு காண்கிறோம் அல்லவா! மதுரையம்பதியை சண்பக பாண்டியன் ஆண்டு வந்த வேளையில் ஒரு மாலைப் பொழுதில், மன்னனும் தேவியும் தனித்து இருந்தனர். தேவியின் கூந்தலில் இருந்து அரியதோர் மணம் தென்றலில் தவழ்ந்து வந்து மன்னவனின் நாசியைத் தொட்டது. விளைவு மன்னனுக்கு ஏற்பட்டது ஐயம், தன் தேவியின் கூந்தலில் இருந்து வந்தது இயற்கை மணமா, அல்லாமல் வாசனைத் திரவியங்களை உபயோகித்ததினால் ஏற்பட்ட செயற்கை மணமா? என்று ஒரு சந்தேகம் மன்னனுக்கு உண்டாக தனக்கு உண்டான ஐயத்தை போக்குபவருக்கு ஆயிரம் பொற்காசுகள் அளிப்பதாக மன்னன் சபையில் அறிவித்தான். இறைவன்பால் பக்தியுடையவனும் பொருளில்லாதவனும், திருமணத்தின் பால் நாட்டமுள்ளவனுமான தருமி என்னும் புலவன் இறைவனை அணுகி கீழ்க்கண்டவாறு வேண்டினான்.

''ஐய யாவையு மறிவை கொலோ
வையை நாடவன் மனக்கருத்துணர்ந்
துய்யவோர் கவியுரைத் தெனக் கருள்
செய்ய வேண்டு மென்றிரந்து செப்பினான்.''

— திருவிளையடற் புராணம்
தருமிக்கு பொற்கிழி அளித்த
படலம்-87.

இறைவனும் தமிழ்ச் செய்யுள் ஒன்றை செய்து தருமிக்கு அருளினார். அவையில் தருமியின் பாடலில் மகிழ்ந்த மன்னன் பொற்கிழி அளிக்க அதை கொடுக்காதவாறு பாடலில் பொருட்குற்றம் இருப்பதாக நக்கீரன் தடுக்க, இறைவன் மன்னன் திருச்சபையில்புலவனாக வந்து சொற்போர் தொடுத்து, கீரனை வென்று, பொற்றாமரைக் குளத்தில் அமிழ்த்திப் பின் கரையேற்றி அகத்தியர் மூலமாக கீரனுக்குஇலக்கணமும் உபதேசிக்கச் செய்து, தருமிக்கும் பொற்கிழியை அளிக்கச் செய்தார் அல்லவா முக்கண்ணனார். அடியவரின் துயர்துடைக்கவும் உலகத்தார் உய்யவுமே எப்பொழுதும் திருவிளையாடல் புரிபவர் இறைவர். அவர் தொடுக்கும் வழக்கு தொண்டர் தம் உள்ள உறுதி காணவும் அவர்களுக்குப் பிறவாப் பேரின்பம் அளிக்கவுமே ஆகும். இப்பொழுது அவர் தமது தொண்டர் திருநீலகண்டரிடம் தொடர்ந்துள்ள இவ்வழக்கின் முடிவும் நன்மையே பயக்கும்.

வழக்கு தொடருகிறார் நாயனார், அதற்கு விடை பகர்கிறார் நாயனார். 'ஐயா நீர் அருளிச் செய்த வண்ணம் யான் செய்வதற்குப் பொய்யில் சீர்புதல்வன இல்லை; என் செய்வேன்? புகலும்'' என்கிறார்.

சிவயோகியாரும்,

''மையறு சிறப்பின் மிக்க மனையவள்
தன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு மூழ்குவாய்''

என மொழிகிறார். அதனைக் கேட்டு நாயனார் வேறு வழியின்றி தம் நிலையை சிவயோகியாரிடம்''எங்களின்ஓர்சபதத்தால் உடன் மூழ்க இசையவில்லை. ஆகையால் நான்மட்டும் குளத்தில் மூழ்கிக் களவாடவில்லை என்று நிரூபிக்கிறேன்'' என்கிறார். உடன்படாத, சிவயோகியார் தில்லைவாழ் அந்தணர்கள் இருக்கும் பேரவைமுன் வழக்கினை எடுத்துக் கூறுகிறார். அவர்களும் திருநீலகண்டரிடம் அவர்



**தமிழ்நாடு ஆன்மீகப் பேரவையின் சார்பாக 1.1.93 அன்று, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்த பத்மஸ்ரீ பட்டம் பெற்ற நம் அறநிலையத்துறையின் திருமிகு முத்தையா ஸ்தபதி அவர்களுக்கு ''சிற்ப சாஸ்திர வித்யா சரஸ்வதி'' பட்டம் வழங்கப் பெற்றது.**

தம் மனைவியின் கையைப் பற்றிக் குளத்தில் மூழ்கி எழுந்து ஓட்டைக் களவாட வில்லை என்று கூறுமாறு வலியுறுத்துகின்றனர். தம் மனைவியின் கையைப் பிடித்து நீரில் மூழ்க இயலாமையால் திருநீலகண்ட நாயனார் தம் மனைவியை அழைத்து அவர் கையில் ஒரு மூங்கில்கழியின் ஒரு முனையைப் பிடிக்கச் செய்து மறுமுனையை தாம் பிடித்து ''யான் ஓடு களவாடிலேன் இது சத்தியம்'' என்பதாக உறுதி கூறி நீரில் மூழ்கி எழுகிறார். என்னே அதிசயம்! 'வாவியில் மூழ்கி எழும் கணவரும், மனைவியாரும் மேவியமூப்பு நீங்கி விரும்பும் இளமை பெற்றுத் தோன்றுகின்றார்கள். அந்நிலையில் அவரைக் கண்டு அதிசயம் கொள்கின்றனர் மக்கள். வழக்காடிய சிவயோகியை அங்கு யாரும் காணவில்லை; சிவயோகியார் சிவபெருமானாகத் தம் துணையுடன் விடைபேற் தோன்றி ஆகாயத்தில் காட்சி தருகின்றார். யாவரும் இவ்வற்புதக் காட்சியைக் கண்டு, கைகளைத் தூக்கி வணங்குகின்றனர். திருநீலகண்டரும் தம் துணைவியாருடன் இறைவனை வணங்குகின்றார். மன்றுளே திருக்கூத்தாடும் ஐயன் நாயனாரை நோக்கி,

''வென்ற ஐம்புலனால் மிக்கீர்! விருப்புடன்
இருக்க நம்பால்
என்றும் இவ் விளமை நீங்கா'' என்று அருளிச்
செய்கின்றார்.

நாயனாரும், அவரது மனைவியாரும் அவ்வாறே சிவயோகம் எய்தி பெறலரும் இளமையோடு பேரின்பம் காண்கிறார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் ஏழாம் திருமுறையில் திருநீலகண்ட நாயனாரை தில்லைவாழ் அந்தணருக்கு அடுத்தபடியாக வைத்து

'தில்லைவாழ் அந்தணர்தம் அடியாருக்கும்
அடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க்கடியேன்''

எனப் பெருமைப்படுத்துகிறார்.

அத்தகு பெருமைப் பெற்ற திருநீலகண்ட நாயனாரின் திருத்தொண்டினை உலகுக்கு உணர்த்தியதன் மூலம் இறைவன் அனைவருக்கும் காட்சியளித்ததோடு தான் அடியவருக்கு அடியவன், 'நல் அன்பர்க்குத் தாயினும்' நல்லன் என்பதை உணர்த்துகின்றார்.

''தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்.
ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை
சேயினும் நல்லன் அணியன் நல்அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்ச்சடையோனே''

(திருமந்திரம்.)

# வள்ளுவர் காட்டிய பாதை

கலைமாமணி திருக்குறளார் வீ. முனுசாமி

(''சாதி, மத வேற்றுமைகளைக் கடந்து மனித நேயத்தோடு வாழ வேண்டும். அதற்கு வள்ளுவர் காட்டிய பாதையில் செல்ல வேண்டும்'' என்கிறார் திருக்குறளார் வீ.முனுசாமி.)

ஓரறிவு பிறவி-ஜீவன் முதற் கொண்டு ஆறறிவு படைத்த மனித குலம் வரையில் தேசத்துக்கு பயன்பட்டுத்தான் வருவதைக் காண்கிறோம்.

மனிதனுக்குப் பகுத்தறிவு இருப்பதனால் நல்ல செயல்களை அவன் தானாகவே செய்ய முடிகிறது. மற்ற ஜீவராசிகளுக்கு அறிவு இல்லாததனால் அவைகள் பயன்படும்படி செய்ய வைக்க வேண்டியவைகளாக இருக்கின்றன.

உதாரணமாக பசு பால் கொடுக்கிறது. தானாகக் கொடுக்காது. நாம் பிடித்து கறக்க வேண்டும். மனித இனத்தில் கயவர்கள் என்ற இனம் உண்டு. இவர்கள் மனிதப் பிறவிக்கு ஏற்ற குணங்கள் கடுகு அளவேனும் இல்லாதவர்கள். கயவர்களைக் கசக்கிப் பிழிந்துதான் பயன்படுமாறு செய்ய வேண்டும். பார்ப்பதற்கு மட்டும்தான் கயவர்கள் மனிதர்கள் போல இருப்பார்கள் என்பதை 'மக்களே போல்வர் கயவர்'' என்று ஆசிரியர் திருவள்ளுவர் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

மனித நேயம் என்பது மிகச் சிறந்த உயர்ந்த மேலான பண்பாட்டினைக் குறிப்பது ஆகும். அன்பு பாசம் பரிவு பற்று நேசம் உறவு பந்தம் என்பன போன்று சொல்லுகின்ற தன்மைகள் எல்லாம் மனிதப் பிறவிக்கே சொல்லப்பட்ட உயர்ந்த குணங்கள் ஆகும்.

விலங்கினங்கள் என்று சொல்லப்படுகின்ற மிருகங்களுக்கு இந்த தன்மைகள் இல்லாததால் அவைகள் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்கின்றன முட்டிக் கொள்கின்றன. இன்னும் பயங்கரமான செயல்களைச் செய்கின்றன.

இறைவனுக்குச் சிறப்பினைச் சொல்லுகின்ற திருவள்ளுவர் 'குணத்தான்' என்று பெயரிட்டார். முனிவர்களின் சிறப்பினை பேச வந்த திருவள்ளுவர் ''குணம் என்னும் குன்று ஏறி நின்றார்'' என்று பெருமையாகக் குறிப்பிட்டார்.

கொடுமையான கொடூரமான மிருகம் ஒன்று மற்ற விலங்கினங்களைக் கொன்றுவிடுகிறது. ஒரு உயிரைக் கொல்வது பாவம் என்று அந்த மிருகத்துக்குத் தெரியாது...கொலை செய்கிறோம் என்று அதற்குத் தெரியாது. ஏன் அவைகள் மிருகங்கள் விலங்கினங்கள்.

ஆதலால்தான் மனிதப் பிறவி எடுத்தவர்களும் மிருகத்தனம் கொண்டவர்களாக மாறி மிருகச் செயல்களைச் செய்கிறார்கள். பிறவி மனிதப் பிறவியாக இருந்தாலும், மிருக குணங்கள் படைத்தவர்கள் ஆகையால் அவர்களைப் பார்த்து எருமை நரி என்பன போன்று பெயரிட்டுக் கூப்பிடுகிறோம்.

மக்களிடையே வேறுபாடும் மாறுபாடும் பகைமைக் குணத்தை சிறுகச் சிறுக வளர்க்கின்றன என்பது வெளிப்படையாக உண்மையாகும்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் ஒரு குறளுக்கு உரை எழுதும்போது 'சாதி பற்றியும், சமயம் பற்றியும்' என்பது போல குறிப்பிட்டு மதமாச்சரியங்கள் என்று சொல்லப்படுபவைகளைக் காரணமாகக் கொண்டு பல கூட்டங்கள் ஒரு நாட்டில் இருக்கக் கூடாது என்று தெளிவுபடுத்துகிறார்.

''பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு.'' இந்த குறட்பாவுக்கு விளக்கம் சொல்ல வந்த உரை ஆசிரியர் சாதி பற்றியும் வருணங்கள் மதங்கள் பற்றியும் இருக்கின்ற கூட்டங்களை எல்லாம் உட்பகை என்ற கூட்டங்களோடு சேர்ந்து நாட்டை அழிக்கின்ற தீயவர்களோடு ஒன்று சேர குறித்துக் காட்டுகிறார்.

சமரச சமத்துவ சன்மார்க்க நெறியினை சொல்ல வந்த வடலூர் வள்ளலார் ''சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்திய அருட் பெருஞ்சோதி.''

உலகெங்கும் மனித நேயத்தை வளர்ப்பதற்கும் மனித வாழ்க்கை வளர்வதற்கும் வள்ளுவர் வழியில் நிற்கும் வள்ளலார் அருளிய அருள்மொழிகளை இந்த அயோத்தி நரகர்கள் அறியவில்லையே!

கல்வி, அறிவு மதி நுட்பம் என்ற இவை போன்ற ஆற்றல்கள் பலபெற்றிருந்தாலும் பண்புடைமை என்கின்ற சீரியகுணம் இல்லை என்றால் அவன் சிறப்பாக சொல்லிக் கொள்கின்ற அனைத்தும் பயனற்றவையே ஆகும்.

திருவள்ளுவர் மக்கள் பண்பு இல்லாதவர்களை மரக்கட்டைகள் என்று சுட்டிக் காட்டுகிறார்.



''மரம் போல்வர் மக்கள் பண்பு இல்லாதவர்'' என்பது வள்ளுவப் பெருமானின் வாக்கு ஆகும். நாடெங்கும் மனித நேயத்தை வளர்க்கின்ற மிகப்பெரிய திட்டங்களை நல்ல மனதுடன் செயல்படுத்தவில்லை என்றால் மனித பிறவி எடுத்தவர்கள் எல்லாம் விலங்கினங்களாக மாறி நல்ல நகரங்களை எல்லாம் அயோத்திகளாக ஆக்கிவிடுவார்கள் என்பது மிகையாகாது.

அயோத்தியில் நடைபெற்ற கொடுமையான செயல்களுக்கு எல்லாம் அடிப்படை காரணமானவர்கள் கல்வி அறிவு, பட்டம் பதவிகள் இல்லாதவர்கள் என்று சொல்லி விட முடியுமா?

மதம் என்கின்ற பேய் அத்தனை கல்வி அறிவு முதலியவற்றைக் கொன்று விலங்கினங்களாக ஆக்கி விட்டதே, பேயாட்டம் ஆடி விட்டார்களே, ஆதலால்தான் வடலூர் வள்ளலார் 'மதம் எனும் பேய் பிடியாது இருக்க வேண்டும்' என்றும் கூறினார்.

பல நூல்களை-சாத்திரங்கள் என்று சொல்லப்படுகின்ற பலவற்றையும் ஒருவன் மேதாவித்தனமாக படித்து இருந்தாலும் அத்தனை படிப்பும் அவனுடைய தீய மனத்தினை-கயவர்கள் மனத்தினை நல்லவர்களாகச் செய்துவிட முடியாது என்று ஆசிரியர் வள்ளுவர் குறிப்பிடுகிறார்

''பல நல்ல கற்ற கடைத்தும் மனம் நல்லர் ஆகுதல் 'மாணார்க்கு அரிது''-இந்த குறளின் கருத்தை நன்கு தெளிவுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

பல நல்ல நூல்களைப் படித்து மேதாவியாகக் காட்சியளித்துக் கொண்டு இருப்பவனை-அவன் மிகவும் படித்தவன் ஆனபடியால்-நல்லவனாகத்தானே இருப்பான் என்று உலகம் நினைக்கிறது. அப்படி நினைத்து விடாதே என்கிறார் வள்ளுவர்.


இந்த அரிய கருத்தைப் பலமுறை சிந்தித்து பார்க்க வேண்டும். சாத்திரங்கள் பலவற்றையும் ஞான நூல்கள் பலவற்றையும் கற்று அறிந்த கூட்டத்தினர் நிறைந்து இருக்கும் அயோத்தி பக்கங்களிலா இத்தனை கொலை பாதகச் செயல்கள் நடைபெறுவது?

உலகம் போற்றும் மகான்கள் ராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றவர்கள் பிறந்த வடநாட்டிலா இத்தகைய கொடும் செயல்கள் நிகழ்வது? திருக்குறளிலே பண்புடைமை என்ற தத்துவத்தை அடிப்படையாக வைத்து மனித வாழ்க்கையினைச் சிறப்புடையதாக ஆசிரியர் திருவள்ளுவர், காட்சி அளிக்கும்படி செய்கிறார்.

மனித நேயமே வா்ழ்க்கையின் நன்னெறி. மனித வாழ்க்கையில் வள்ளுவர் பாதையில் வாழ்ந்து வளம்பெற்று மனித நேயம் மலர்ந்து உயர்வான ஒற்றுமை குணத்தினை நிலைநிறுத்துவோமாக.


சித்திரபாரதம்
கவ: செவ்வேள்
ப: M.N.ராஜா
விரதசாரிணி! இனி இங்கு நீ நிற்காதே! உன் அந்தப்புரத்திற்கு விரைந்து போ. நானும் என் இருப்பிடம் போகிறேன்.
இருவரும் நர்த்தன இடத்திருந்துப் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் போர் அரவம் கேட்டு விழித்தெழும் கீசகனின் நூற்றிமூன்று தம்பிகளும் வசந்த மண்டபம் வந்து பார்க்கிறார்கள்
தசை மலையாகக் கிடக்கும் கீசகனின் உடலைக் கண்டு கலக்கமுறுகிறார்கள்.
ஆ அண்ணா! ஐந்து கந்தர்வர்கள் வந்து உனை இவ்வாறு வதைத்துப் போனார்களா?
உன் உடலை எரிக்கப் போகும் அதே நெருப்பில் அந்த வண்ண மகளையும் எரித்தால் அன்றி எங்கள் சினம் மாறாது
கீசகனின் தம்பிகள் விரதசாரிணியை வந்து இழுத்துக் கொண்டு செல்கிறார்கள்
கந்தர்வர்களே! என்னை வந்து காப்பாற்றுங்கள்.
துரோபதையின் கதறல் கேட்டு அங்கு விரைந்து ஓடி வருகின்ற பலாயனன், வேருடன் மரங்களைப் பறித்து அவர்களையெல்லாம் எமலோகம் அனுப்புகிறான்.
விடிந்ததும் கீசகவதம் நிகழ்ந்த சேதி காட்டுத்தீ போல் நகரெங்கும் பரவுகிறது. விராடனும் அவன் தேவியும் பெரிதும் மனம் வருந்த கங்கபட்டர் அவர்களைத் தேற்றுகிறார்.
அதே நேரம் அத்தினாபுரத்தில் துரியோதனன் பெரிய மனக் கவலையுடன் கிடந்து புலம்புகிறான்.
பாண்டவர்கள் மறைந்திருக்கும் இடம் தெரிந்தாலல்லவா அவர்களை மீண்டும் காட்டிற்கு அனுப்பமுடியும்


பாண்டவர்களைத் தேடிச்சென்ற தூதுவர்களும் அத்தினாபுரிக்குத் திரும்பி வந்து தங்கள் தோல்வியைத் துரியோதனனிடம் தெரிவிக்கிறார்கள்.
பூவுலகம் முழுவதும் தேடிவிட்டோம். பாண்டவர்களை எங்களால் கண்டுபிடிக்க முடிய-வில்லை அவர்கள் வேறு உலகங்களுக்குப் போய் ஒளிந்து கொண்டுவிட்டார்களோ என்றும் சந்தேகிக்கிறோம்.
துரியோதனா! உன் தூதர்களின் ஆற்றல் அவ்வ-ளவு தான். பாண்டவர்கள் மறைந்திருக்கும் நாடு எல்லா வளங்களும் மிக்கு விளங்கும். அந்தச் சிறப்பைக் கொண்டே அவர்கள் மறைந்திருக்கும் இடத்தை மிக எளிதில் கண்டுபிடித்துவிடலாம்.
வீடுமர் இத்தகைய உபாயம் கூற, ஒரு தூதன் கூறுகிறான்.
அரசே விராடதேசம் எல்லா வளங்களும் மிக்கு விளங்குகிறது.
மேலும் அந்நாட்டின் தளபதி கீசகனும் அவன் தம்பி-கள் நூற்றி மூன்று பேரும் ஒரே நாளிரவில் யாராலோ சாகடிக்கப்பட்டு இருக்கிறார்கள்.
துரியோதனன் அச்செதியைக் கேட்டுத் துள்ளிக் குதிக்கிறான்.
அப்படியானால் விராட தேசத்தில் தான் பாண்டவர்கள் இருப்பார்கள். அவர்களைக் கண்டு பிடித்து மீண்டும் காட்டிற்கு அனுப்பு-கின்றேனா இல்லையா! பாருங்கள்.!




தமிழ்க்கடல்
சிவத்திரு இராய. சொக்கலிங்கனார்

திருப்பரங்குன்றம் இனிதுறையும்செல்வா
போற்றி
திருச்செந்தூர்ச் சீரலைவாய்த் தேவா போற்றி
திருப்பழநி மலையிருக்குந் தேவே போற்றி
திருவேரகச்சாமி நாதா போற்றி
திருத்தணிகை முதல்மலைகள் திகழ்வாய்போற்றி
தீம்பழங்கள் உதிர்சோலை சேர்வாய் போற்றி
திருப்பொழிய உலகாளும் செம்மால் போற்றி
செந்தமிழ்த் தெய்வமே போற்றி போற்றி

சொக்கேசர் பெற்றஉயர் தோன்றால் போற்றி
தொல்உமையாள் ஈன்றெடுத்த சோதி போற்றி
சக்கரம்கொள் மால்தங்கை தனையா போற்றி
தத்துவங்கள் கடந்ததனிப் பொருளே போற்றி
நக்கீரர், பழம்பாட்டை நயப்பாய் போற்றி
நாவலர்கள் கவிக்கினிய நம்பா போற்றி
விக்கின விநாயகனுக்கு இளையாய் போற்றி
வேடர்குல மாப்பிள்ளாய் போற்றி, போற்றி!

அருணகிரி நாவில்நடம் புரிவாய் போற்றி!
அனுபூதி அலங்காரப் புகழாய் போற்றி
கருணைபொழி பன்னிரண்டு கண்ணா போற்றி
கார் அனைய கைஈராறு உடையாய் போற்றி
அருள்சுரக்கும் ஆறுமுகத்து அண்ணால் போற்றி
ஆலாலம் உண்டகண்டன் பாலா போற்றி
வெருவுறச்சூர் தடிந்தவடி வேலா போற்றி
மெய்ஞ்ஞானப்பிள்ளையே போற்றி! போற்றி!

வள்ளியெனும் குறக்கொடியை மணந்தாய்
போற்றி
மணப்பதற்கு மரம்போல் நின்றாய் போற்றி
கொள்ளைகொளும் எழில் அமைந்த குமரா
போற்றி
கும்பிடுவோர் இடர்களையும் குகனே போற்றி
தெள்ளுதமிழ்ப் பெருங்கடலுள் திளைப்பாய்
போற்றி
தீந்தமிழால் வைதார்க்கும் அருள்வாய் போற்றி
புள்ளிமயில் ஏறிவரும் புனிதா போற்றி
புண்ணியம்செய் புண்ணியமே போற்றி!
போற்றி!
தேவயானையை மணஞ்செய் சிங்கம் போற்றி
தேவசேனாபதியாத் திகழ்ந்தாய் போற்றி
தேவயானைக்கிளைய சிறுவா போற்றி
தேவேந்திரன் மருமகனாம் செம்மல் போற்றி
தேவர்சிறை மீட்டருள்செய் தீரா போற்றி
தேவரெலாம் தொழச்சிறந்த தேவே போற்றி
தேவாரம் பெறுசிவனார் மைந்தா போற்றி!
தேவாதி தேவனே போற்றி! போற்றி!

கந்தா! குகா! கடப்பந்தாராய் போற்றி
காதலியர் இருவரையும் பிரியாய் போற்றி
கொத்தாரும் குறிஞ்சிப்பூந் தொடையாய்
போற்றி!
கோழிஎனும் கொடிகொண்ட குரிசில் போற்றி
செந்தேறல் தினைமாவோடு உண்டாய் போற்றி
தினைகாத்த சிறுமிமயல் சேர்ந்தாய் போற்றி
எந்தாயே எம் அப்பா இறைவா போற்றி
எழுத்தழிக்கும் இணையடிகள் போற்றி போற்றி

சரவணத்தில் வந்துதித்த தவமே போற்றி
சரவணபவா: கார்த்திகேயா போற்றி
முருகனெனும் அழகுஇளமை முதலே போற்றி
முனிவர்களும் வணங்குகின்ற மூர்த்தி போற்றி
திருகுகணத்து அசுரர்விழச் செற்றாய் போற்றி
தேவர்மறைத் தீவளர்த்த சீரோய் போற்றி
உருகுமனத்து அடியர் உளத்து உறைவாய்
போற்றி
உறுகிரிகள் உறைபவனே போற்றி போற்றி.

மாம்பழத்துக்கு உலகைவலம்வந்தாய் போற்றி
மயில்ஏறிக் கணப்பொழுதில் அடைந்தாய்
போற்றி
தீம்பழத்தை அண்ணன்உணக் கண்டாய்போற்றி
தேமுதல்வன செய்சூழ்ச்சி அறிந்தாய் போற்றி
சேம்பதுமப் பிரமன் அஞ்சச்செய்தாய் போற்றி
சிறையிட்டுப் பொருள்கூறும் செவ்வாய்போற்றி
காம்பணிதோட் கயற்கண்ணி கண்ணே போற்றி
கட்டழகுக் கடவுளே போற்றி! போற்றி

உலகீன்ற ஒருகன்னி மகனே போற்றி
ஊழிமுதல் சிவன்தந்த ஒருவ போற்றி
பலகலையும் உணர்அறிவுப் பழமே போற்றி
பன்னிரண்டுகண்,கைகள் படைத்தாய் போற்றி
மலர்ஆறு முகம் கொண்ட வள்ளால் போற்றி
வள்ளி மலர் அடி வணங்கும் மணாளா போற்றி
மலைபிளக்க வேல் எறிந்த மன்னா போற்றி
மயில்ஏறும் பெருமானே போற்றி! போற்றி.

கடல்வற்ற வேல்விட்ட கடம்பா போற்றி
கார் அவுணக் கடல்குடித்த காளை போற்றி
குடல்சரியச் சூரன்உரம் குடைந்தாய் போற்றி
குன்றமெல்லாம் குடிகொண்ட குழவி போற்றி
மடவர்மார் வயிற்றில் தீ வைத்தாய் போற்றி
மறைவகுத்த மகத்தீயை வளர்த்தாய் போற்றி
படஅரவில் துயில்மாயோன் மருகா போற்றி
காம்பணிந்த பரன்மகனே போற்றி! போற்றி

மருவினிய மலர்ப்பாதம் போற்றி போற்றி
மாவீரச் சிலம்புக்கால் போற்றி. போற்றி
பொருவரிய பொன்னின் இடை போற்றி
போற்றி
போர்வல்ல, வரைமார்பம் போற்றி! போற்றி
தருகொடைக்கை பன்னிரண்டும் போற்றி,
போற்றி!
தாயெனும்சீர் முகம் போற்றி! போற்றி!
போற்றி!
அரன்மகிழ மனைபுல்வாய் போற்றி! போற்றி!
அருட்கண்கள் போற்றியோ! போற்றி! போற்றி

# தில்லைத் திருக்கூத்து

திருமதி ஜி. கமலா, பி.எஸ்சி.,

''அந்தரத்தே நின்றாடும் ஆனந்தக்
கூத்தனுக்கென்
சிந்தை திறைக்கொடுத்து சேவிப்ப
தெந்நாளோ!''
— தாயுமானசுவாமிகள்

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பரம்பொருளை ஆனந்தித்தலே ஞான வாழ்வின் முடிபு நிலை. பரம்பொருள் காலம், இடம், நியதி, காரிய காரணங்களைக் கடந்தவன். மனம், வாக்கிற்குத்தட்டாமல் நிற்பவன். தத்துவாதீதன். இவ்வெட்டாப் பொருளைப் எட்டிப் பிடிக்களட்டடி வைத்திடல் வேண்டும். அவை முறையே இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதி என்பன. இவை அட்டாங்க யோகம் என்று சொல்லப்படும்.

யோகம் இணைதல் எனும் பொருளது. யோகம் என்ற சொல்லிற்கு, உடலுக்கும் மனத்திற்கும் இடையே, மனதிற்கும் ஆன்மாவிற்கும் இடையே, ஆன்மாவிற்கும் பரமான்மாவிற்கும் இடையே ஐக்கியம் பெறுவது என்பது பொருள். யோகத்தால் தான் எம்பெருமானின் திருக்கோலத்தைக் கண்டு உணர்ந்து ஆனந்திக்கலாம்.

எம்பெருமான் திருநடனம் புரிந்திடும் இடம் தில்லை என வழங்கப்படுகிறது. தில்லையில் ஆடிடும் திருநடனத்தை உணர்த்த கிரியாம்சமாகக் கட்டப்பட்டதே தில்லை அம்பலம். இத்தில்லை யெனும் சிதம்பரம் எல்லையற்ற பெருமையுடையது. இத்திருக்கோயிக் அடியார்கள் நடராசனின் நடனக் காட்சியைக் கண்டு மகிழ்வர். ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்பார் சுந்தர மூர்த்தி நாயனார். இவர் அந்தணர்தம் பாரம் பரியப் பெருமையை உணர்த்தவே இவ்வாறு பாடியருளினார். இங்கு இடையறாது நடைபெறும் வேள்விப் புகையும் அகிற் புகையும் வீதியெல்லாம் நிரம்பித் தெய்வீகத் திருவுணர்வை நிரப்பும். இத்திருக்கோயிலில் முன்புறம் வெள்ளியால் வேயப்பட்டிருக்கும். இது சிதாகாச தத்துவத்தைக் காட்டும். மூலவர் உள்ள பகுதியின்மேற்கூரை பொன்னால் வேயப் பட்டிருக்கும். இது கனக சபை அல்லது ஞான வெளியை உணர்த்தும். கனக சபை அல்லது பொற் சபையைக் கடந்து, நடராசப்பெருமான் இருக்கிறார்.

தில்லை எனும் சொல்லை, தில்,ஐ எனப் பிரிக்கலாம். 'தில்' என்பது வியப்பதற்குரியதாக அமைந்த சொல். வலிமை என்றும் பொருபடும். 'ஐ' தலைமை என்று பொருள்படும். பெறுதற்கரிய இப்பிறவியில் எடுத்த (மானிட) உடல் மிக அதிசயமும் அற்புதமும் ஆச்சரியமும் வாய்ந்தது. நாம் வாழ்வாங்கு வாழ ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ள பெருமான் இவ்வுடலை நமக்குக் கொடுத்து இருக்கிறான். இவ்வுடலுள் ஆன்மா குடி கொண்டிருக்கிறது. ஆன்ம கொள்கையானது உடலாகிய தில்லையில் விளங்கிக் கொண்டிருக்கிறது. எனவே நாம் வாழும் இடம் தில்லை.

தில்லையில் ஐந்து வகையான சபைகள் இருக்கின்றன. அவை அருளாளர்கள் நமக்கென்று அமைத்துக் கொடுத்த ஐந்து வகையான எல்லைகள். அவை பின்வருமாறு:

1. தில்லை வனம்
2. தில்லை ஊர்
3. தில்லை மூதூர்
4. பொன் தில்லை
5. பொற்பதி— பொற்தில்லை பதி

என்பன.

முதற்கண் இந்த உடல் செடி கொடிகள் நிறைந்த வனமாகயிருக்கிறது. செடி, குற்றம் எனும் பொருட்தரும். கொடி இந்த உடலை ஒடிப்பது எனும் பொருள்படும். இந்த வனத்தைச் செப்பனிட வேண்டும். காராரும் ஆணவக் காட்டைக்களைந்து, அகங்காரம் என்னும் பாறைகளைப் பிளந்து, நெஞ்சகமான பூமி வெளி காண வேண்டும். இவ்வெளியை எம் பெருமான் இடமாகக் கொண்டு முதன் முதலா ஆடிய கூத்து வனக்கூத்து அல்லது சுந்தரக் கூத்து. இவர் உடலை மையமாகக் கொண்டு 'நமசிவய' என்னும் ஊன நடனம் புரிந்து ஒரு மாற்றத்தை உண்டாக்குகிறார். ஊன நடனம் 'யவாசிமந' என ஆடப்படுவது. இதனால் உடல் அழகு பெறுகிறது. சாதகனுக்குப் பரம் பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற சித்தம் உண்டாகிறது. இது மூலாதாரத்திலிருந்து ஆடப்படுகிறது. இந்நடனம் இடம்பெறும் சபை சித்திரச் சபை.

சித்திரச் சபையே தில்லை பூமி. இப்பூமி வெளியில் மோனமாம் வித்தைப் பதிக்க வேண்டும். மோனமாவது சும்மாயிருப்பது-நினைப்பு மறப்பு அற்றிருப்பது. நினைப்பு மறப்பினை

# ஏதுக்குப் பிறந்தார் ?

வாதுக்குச் சண்டைக்குப் போவார்
வருவார் வழக்கு உரைப்பார்
தீதுக்கு உதவியும் செய்திடு
வார்தினம் தேடி ஒன்றும்
மாதுக்கு அளித்து மயங்கிடு
வார்விதி மாளும் மட்டும்
ஏதுக்கு இவர்பிறந் தார் இறை
வாகச்சி ஏகம்பனே.

—பட்டினத்தடிகள்.



நல்குவதுமனம். இதனின்று நாள்தோறும் எண்பது கோடி எண்ணங்கள் பிறக்கின்றன. இதன் விளைவால் பிறவி உண்டாகிறது. ஆனால் இம் மனம் மிகச் சூட்சுமமானது. ஆகாயத்தைக் காட்டிலும் துல்லியமானது. விசாலமானது. இதை மோனாநுட்டானத்தால் தெளியலாம்.

மோனத்தில் மனம் அசைவற நின்றால் குவியும். குவிந்த மனதிலிருந்து ஒரு சக்தி தோன்ற இன்பம் உண்டாகும். மன அணுக்கள் தேய்ந்து வெளியாகும். இது மனவெளி. மனவெளியே ஞானத்தின் இரண்டாம் பகுதி. இவ்வெளியை சபையாகக் கொண்டு அப் பெருமான். 'சிவயநம' என்னும் ஞான நடனம் புரிகிறான். இதனால் சாதகனுக்கு, இது மாயை, இது சீவன், இது ஞானமுடையது இது ஞானமற்றது என வேறுபடுத்தி தெரிந்து கொள்ளும் ஞானம் அழுத்தப்படுகிறது. எனவே மனவெளி எம்பெருமான் நடனமிடும் தாமிர சபையாகிறது. இந்நிலையில் தில்லை வனம் தில்லை ஊராகும். தில்லை ஊரில் ஆன்மா உணர்வாய் நிற்கும். இங்கு மனோ சக்தி பொருந்தி நிற்றலால் தில்லை ஊரன் எனும் பொருள்பட தில்லை ஊரகம்பாகத்து உமை என்றும் கூறுகிறார் அபிராமி பட்டர். சிதாகாயமும் மனோகாயமும் மருவும் இடத்தில் 'உமை' அருட்சக்தியாக ஊர்ந்து, இரு பதார்த்தங்களைத் தாளிக்கையில் ஏற்படும் புது வாசனை போன்றதொரு அனுபவத்தை உண்டாக்குகிறாள்.

உமா எனும் மந்திரம் உகாரமாகிய சக்தி முன் நின்று நடுவில் ஆன்மா அமைந்து தந்தை யாகிய சிவனை சிகாரமாக வைத்து வெளிப்பட்ட மந்திரம். உ-ம் — அ-உமா இங்கு 'ஓம்' சிவயநம' என விரிகிறது. எனவே தில்லை ஊராக அமைத்து ஆடுகின்ற கூத்து ஞானத்தைக் கொடுக்கும். இது கண்டத்தில் ஆடுகின்ற கூத்து.

தில்லை ஊரில் உணர்வாய் நின்ற சாதகனுக்கு இது சமயம் ஞானசற்குரு தேவை. அவன் குருவடி வணங்கி, தொண்டு புரிந்து 'மகாவாக்கியத்தைப்' பெற வேண்டும். இவ் வாக்கியம் பக்குவமுற்ற 'சீடனுக்கு ஆச்சாரியர் தானாக வந்து அருளுவார். இவ்வாக்கியம் குருமொழி எனப் பகரப்படும். மனவெளியில் உணர்வை நிறுத்தி உணர்வால் இம்மொழியை உபாசனை செய்ய வேண்டும். எந்த மடலூடும் எழுதா இறைவடிவைச் சிந்தை மடலாய் எழுதிச் சேர்க்க வேண்டும். சேர்க்கும்இடத்தை ஞானாசிரியர் குறிப்பாகக் காட்டுவார். இக் குறிப்பில் சாதகனது அறிவு ஒன்ற வேண்டும். இக்கருத்தைத் தாயுமான சுவாமிகள்

''அறிவோடு அறியாமை அற்றறிவினி னூடே
குறியில் அறிவுவந்து கூடும்நாள் எந்நாளோ?''

எனும் பாடலில் வெளிப்படுத்துகிறார். இத் தருணம் சாதகனுக்குக் குருவருளும் திருவருளும் கூடினால், இக்குறிப்பு தில்லை மூதூருக்குக் கொண்டு செல்லும்.

சாதகன் தில்லை மூதூருக்குச் செல்ல நெஞ்சம் இளகி, அன்பினால் கரைந்து கரைந்து

''உற்றுற்று நாடி உளமருண்ட பாவியைநீ
சிற்றரங்கில் ஆளத் தகாதோ பராபரமே''

—தாயுமான சுவாமிகள்

என்றபடி அன்புருவாய் நிற்க வேண்டும். குறிப்பில் சாதகனது உணர்வு அழுந்த அழுந்த பிராணன் இலயமாகிறது. பிராண அபானங்கள் மூலாதாரத்தில் முடங்கியுள்ள மூல அனலை எழுப்பும். மூலஅனல் குண்டலியாகப் புறப்பட்டு சாதகனது அறிவில் பாயும். அறிவு (உணர்வு), குண்டலினி, அருட்சக்தி கூடும் இடத்தில் குருமொழி ஒளிர்ந்து பிரகாசிக்கிறது. இப்பிரகாசத்தினைச் சாதகனது உணர்வு உணர்கிறது. எனவே அவனது பார்வை பொலிவாக, ஒளி பொருந்தியதாக யிருக்கும். இப்பார்வை அருட்பார்வை. ஒளிர்ந்த ஒளிக்கதிர்கள் அவனது உணர்வு அணுக்களில் பதிய உணர்வு பற்றி எரியும். இச்சோதி அகண்டு வெளியாகும். இவ்வெளி உணர்வுகாசமானதால் உண்டான சிற்பர வெளி. சிற்பரவெளியைச் சிற்றம்பலம். சிற்சபை, சிதாகாசம், சிதம்பரம் என்பர். இப்புண்ணிய எல்லையைத் சிற்சபை, சிதாகாசம் சிதம்பரம் என்பர். இப்புண்ணிய எல்லையைத் தில்லை மூதூர்என்கிறார்பட்டர். இது புருவ மத்திமத்தில் இடம் பெறுகிறது. இங்கு திருவடி மட்டும் ஆடுவது போல தோன்றும். ஆடுகின்ற சபை வெள்ளி சபை. இதனை மணிவாசகர்

'' தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றவ னாகி

## நிலையற்ற பாண்டம்

ஊற்றைச் சரீரத்தை ஆபாசக்
கொட்டிலை ஊன்பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறிடும்
தோற்பையைப் பேசரிய
காற்றில் பொதிந்த நிலையற்ற
பாண்டத்தைக் காதல்செய்தே
ஏற்றுத் திரிந்து விட்டேன்இறை
வாகச்சி ஏகம்பனே

—பட்டினத்தடிகள்



எனக் குறிப்பிடுகின்றார். புருவ மத்திமத்தை இடமாகக் கொண்டு வெள்ளி சபையில் (சிற் சபையில்) நடனமிடும் கூத்து அற்புதக்கூத்து. உருவமின்றி ஆடும் இக்கூத்தில் உமையவள் திரிபுரையாகி ஒன்றியிருக்கிறாள். இக்கூத்து, மாயை, மாமாயை கடந்து நின்ற மகான்கள் காணும்படியாக, அறிவிற்கு அப்பாலாய், அரு ளெல்லாம் உமையவள் உருவெளிப்பட்டு ஆடும் அற்புதக் கூத்து. இத்திருக்கூத்தைத் தரிசித்த வர்களுக்கு, புளியைப் பார்த்தவர்கள் தம் வாயில் உமிழ்நீர் ஊறுமாப்போல் அருட் கண்ணீர் உகுக்கும். அறிவில் ஆனந்த அமுது ஊறும். இவ்வாறு சிற்சபையான வெள்ளி சபையில் அருளோட்டம் உயிரோட்டமாகும்.

இத்தருணம் உணர்வு காசமாகிய தில்லை மூதூரில் சீவன் தனித்து வெளிப்படும். இது குரு காட்டிய குறிப்பினூடே செல்லும். வட திசை நோக்கி சிவ யாத்திரை தொடங்கும். இந்த யாத்திரையில் சீவன் புருவ மத்திமத்தி லிருந்து மேல் நோக்கி நகரும். அத்தருணம், சாதகனது தேகம் நீங்குமாறு போல பீதி உண் டாகும். அவன், உடல் இலேசாகி உடலி லிருந்து தணிக்கப்படுவது போன்ற நிலை அடை வான்.

குரு மொழியில் காட்டிய குறிப்பினூடே சென்ற சீவன் பிரம்ம பிரகாசத்தால் தான் பிரகாசிக்கும். இப்பிரகாசம் அகண்ட வெளி யாக, சிற்சபை பொற்சபையாகிறது. தில்லை மூதூர், பொன் தில்லையாகிறது. பொற் சபையைக் கனகசபை என்பர். கனகசபையில் சாதகனது யகரமாகிய சீவன் சிவ சக்தியோடு பொருந்தி நின்று ஆனந்திக்கும். அது நிற்கு மிடம் பிடரி. பிடரியில் கனக சபாபதியின் திருநடனம் கண்டு களிக்கும். மற்றும் பிடரி யில் தான் ஏழாம் நிலையான தகராலயம் உள்ளது. தகராலயத்தில் சீவன் ஆணவ மலம் நீங்கி ஆன்மாவாக நிற்கும். ஒவ்வொருமாந்த ரின் ஆன்மா தகரத்தில் இருக்க வேண்டு மென்பதை உணர்த்தவே ஒவ்வொருவர் பெய ருக்கு முன் 'தகரத்தில் இரு' (த், இரு) எனப் பொருள்பட 'திரு' என்ற அடைமொழி கொடுக்கப்படுகிறது.

தகராலயத்தில் ஆன்மா மூன்று விதமாக நிலை பெறுகிறது.

(1) தகர இல்லம்


(2) தகரத்தில் இருப்பது

(3) தகரத்தில் அமிழ்வது

இங்கு பொற்றில்லையே தகர இல்லமாகிறது. அங்கு ஆன்மா நிற்கிறது. தகரம் ஏழாம் நிலை எழுத்து. ஏழாம் நிலை, ஆறு ஆதாரங்களைக் கடந்த பிரம்ம சகஸ்கார நிலை. அருள் அற் புதம் தோன்றுகின்ற இடம் 'தகரம்'. இங்கு அருளானந்தம் அமுதூற்றாகச் சொரியும். தகரம், நுட்பம் எனும் பொருளது. நுட்பமான ஆகாயத்தில் ஞானமும் இன்பமும் ஒருசேர அனுபவிக்கலாம். தகரத்தில் அருள் ஊற்று தொடங்கும் ஏழாம் நிலையின் கதவு இறைவ னால் திறக்கப்படுவதன்று. அடியார்களால் தான் சிறப்பிக்க முடியும்.

தகர அனுபவத்தில் நின்ற ஆன்மா அரு ளானந்தம் பெறும். ஆணவம் எரிந்த கயிற் றிற்கு ஒப்பாகும். இங்கு நடைபெறும் நடனம் சக்தியை திருவம்பலமாக்கி பரஞ்சோதி ஆடும் கூத்து. இச்சோதி சதகோடி சூரியர்கள் உதித் தாற் போன்றது என்பர் அருணகிரிநாதர். அருவமும் உருவமாகி அனாதியாய் பலவாய் ஒன்றாய் பிரம்மாய் நின்ற சோதி-ஒளியாரும் கண்ணும் இரவியுமாய் நின்றுலாவும் பிரம்ம சோதி நடராஜ மேனியாகி மன்றுள் நடனமிடும் இந்நடனம் புருவ மத்திமத்தினின்று ஆறு விரற் கடையில் இடம் பெறும். அவரது சடை ஆகாயத்தைக் குறிக்கும். உடுக்கை நாதத் தத்துவத்தைக் காட்டும். கங்கை சிவனிடத்து உண்டாகும் சிவசக்தி மின்சாரமாய் தோற்றப் படுதலைக் காட்டும். காலின் கீழுள்ள முயல கன் அகங்காரம் அழிக்கப்படுவதைக் காட்டும். அவனது அசைவால் உலகம் அசைகிறது.

சுருக்கமாக, வளமாக யிருந்த உள்ளத் தைப் பெருங்கோயிலாக்கி, முப்பாழும்பாழாய் முடிவிலொரு சூனியமாய் நின்ற மூதூரில் நின்று திருவடி பேற்றைப் பெற்று, பொன்தில்லையில் திருநடனம் ஆனந்தித்து அதற்கப்பாலுள்ள துவாத சாந்தப் பெருவெளியில் நாதாந்த நடனம் ஆனந்தித்து, அத்தில்லையம்பதியில் ஒன்றுதலே தில்லைத் திருக்கூத்தினைச் சேவித்துப் பெறும் பேறாகும்.



# திருப்புகலூர் திருத்தல மகிமை

புலவர் திருக்கண்ணபுர சுப்பிரமணியன், எம்.ஏ. பி.லிட்.,

திருவருள் சுரக்கும் இத்தலம் அப்பர், சம்பந்தர், சுந்தரர் இம்மூவராலும் பாடப் பெற்றது. நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே நான்கு கல் தொலைவிலுள்ளது. கும்பகோணம்-நாகப்பட்டினம், மயிலாடுதுறை-நாகப்பட்டினம் பேருந்துகள் இத்தலத்தில் வழியாகச் செய்கின்றன. நன்னிலம் வட்டம் (நாகை காயிதேமில்லத் மாவட்டம்) முடிகொண்டான் ஆற்றின் வடகரையில் இத்திருக்கோயில் அமைந்திருக்கிறது. 90 அடி உயரமுள்ள ஐந்து நிலைக்கோபுரம் இக் கோவிலை அழகு செய்கிறது. கோயிலுக்கு இரண்டு கோபுரங்கள் உள்ளன. வெளிமதிலின் புறத்தே அப்பர் நந்தவனம் இருக்கிறது. அதைச்சுற்றி நான்கு புறமும் நீர் நிறைந்த அகழி இருக்கிறது. திருக்கோயிலுக்குப் போகும் வாயில் உள்ளது.

தேவாரம், பெரியபுராணம், கல்வெட்டுகள் முதலியவற்றில் இத்தலத்தின் பெயர் திருப்புகலூர் என்று குறிக்கப் பெறுகின்றது. புன்னாகவனம், சரண்யபுரம், சரண்யபுரி, இரக்தாரண்யம் என்ற வேறு பெயர்களும் இப்பதிக்கு உள்ளன. இங்குள்ள சிறப்பு அமசம் இரண்டு மூலத்தானங்கள் உள்ளன. ஒன்று அருள்மிகு அக்னிசுவரர்; அருள்மிகு வர்த்தமானீசுவரர் மற்றொன்று ஆகும். சுயம்பு மூர்த்தியான இறைவனுக்கு புகலூர் நாதர்; புன்னாகநாதர் அக்னிபுரீசுவரர், கோணப்பிரான் என்ற பெயர்களும் இறைவிக்கு கருந்தார்க்குழலி, சூளிகாம்பாள் என்ற பெயர்களும் அமைந்துள்ளன. மற்றொரு மூலத்தானத்தில் எழுந்தருளியுள்ள பெருமானுக்கு வர்த்தமானீசுவரர் என்றும், தேவிக்கு மனோன்மணி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. வர்த்தமானீச்சரத்திற்குத் தனியே திருஞானசம்பந்தர் ஒருபதிகம் அருளியுள்ளார். கோணப்பிரான், கருந்தார்க்குழலி என்ற பெயர்கள் தேவாரத்திலும், திருப்புகலூர் மகாதேவர், கைலாயமுடைய நாயனார், கோணப் பெருமாள் என்ற பெயர்கள் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. அங்கு சந்திரசேகரர் சந்நிதி மிகவும் சிறப்புடையது. கோயிலின உட்பிரகாரத்தில் பூதேசுவரர், பவ்யேசுவரர், அப்பர், வர்தாபிகணபதி முதலியோரின் திருவுருவங்கள் இருக்கின்றன. வெளிப்பிரகாரத்தில் அம்பிகை கோயில் கொண்டெழுந்தருளியுள்ளாள் அதே பிரகாரத்தில் சிந்தாமணீசர் ஆலயமும், அப்பர் பெருமான் ஐக்கியக் காட்சியையும் கண்டு மகிழலாம். கோயிலைச் சுற்றியுள்ள திருக்குளத்தின் தென்மேற்குக் கரையில் சித்தர் கோயில் ஒன்றிருக்கிறது. பூம்புகலூர் மேவிய புண்ணியனைப் பதினெண் சித்தர்களும் வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. தெற்குமடவளாகத்தில் நெற்குன்ற வாணர் என்பார் வழிபட்ட ஞானவிநாயகர் ஆலயம் இருக்கிறது.

திருக்கோயிலைச் சுற்றியுள்ள திருக்குளத்தை அக்கினி தீர்த்தம், பாண தீர்த்தம் என்பர். அக்கினி பகவானும், பாணாசுரனும் இங்கு வழிபட்டமையால் இத்தீர்த்தத்திற்கு அப்பெயர்கள் ஏற்பட்டன. 'தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புகலூர்' என்று அப்பரடிகளும் 'பொங்குதண்புனல் சூழ்ந்து போதணி பொழிற் திருப் புகலூர் என்று சம்மநதப் பெருந்தகையும், பூவிற் பொழிற் புகலூர் என்று சேக்கிழார் சுவாமிகளும் போற்றியுள்ளனர் இத்தலவருட்சம் புன்னைமரம். இது வடக்குப் பிரகாரத்தில் இருக்கிறது. தேவாரத்தில் ''புன்னைப் பொழிற் புகலூர்'' என்றும் பெரிய புராணத்தில் 'புன்னாக மணங்கமழும் பூம்புகலூர்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

முருகநாயனார் இப்பதியில் அவதரித்தது இறைவனுக்கு பூத்தொண்டு புரிந்ததும், அவர் மடத்திற்குச் சம்பந்தர், அப்பர், சிறுத்தொண்டர், திருநீலநக்க நாயனார் முதலியோர் எழுந்தருளி உடனுறைந்ததும், அப்பரடிகள் இங்குப் பலகாலம் தங்கி, உழவாரத் தொண்டு புரிந்து, அற்புதங்கள் நிகழ்த்தியருளி, பதிகங்கள் மனதாரப் பாடித் துதித்து பதிகங்கள் பாடி இறைவன் திருவடிப் பேறெய்தியதும் சுந்தரருக்காக இறைவன் செங்கற்களைப் பொன்கற்களாக அருள் செய்ததும் இப்பதிக்கு மிகச் சிறப்புச் செய்கின்றன.

திருப்புகலூருக்கு சம்பந்தர் இருபதிகங்களும், அப்பர் 5 பதிகங்களும், சுந்தரர் ஒரு பதிகமும் பாடியிருக்கின்றனர். திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்திற்கு சம்பந்தர் பாடியருளிய தனிப்பதிகம் ஒன்றும் உண்டு.

திருப்புகலூரைப் பற்றித் தேவாரத்தில் கூறப்பட்டிருப்பதுடன் . பதினோராந் திரு

முறையில் பரண தேவ நாயனாரின் சிவபெருமான் திருவந்தாதியிலும், பட்டினத்துப் பிள்ளையாரின் திருவேகம்பமுடையார் திருவந்தாதியிலும் சிறப்பாகப் பேசப்பட்டிருக்கிறது. சரண்யபுர மஹாத்மியம் என்ற வடமொழி நூல் ஏட்டுப்பிரதியாக உள்ளது. தொண்டை நாட்டுப் புலியூர்க் கோட்டம் நெற்குன்றம் வாணர் 'திருப்புகலூர் அந்தாதி' என்று நூலை இயற்றியுள்ளார்.

இத்திருக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவை முதல்இராஜராஜன், முதல் இராஜேந்திரன், மூன்றாம் குலோத்துங்கன் முதலியவர்கள் காலத்தவை. அவைகளில் பல அரிய செய்திகள் காணப்படுகின்றன. 'திருப் பொய்கைக் கரை சூழ்ந்த என்ற குறிப்பு வருவதால்அகழி கோயிலைச் சுற்றியிருப்பதைச் சொல்லப்பட்டிருக்கிறது. சிவலிங்க மூர்த்திக்கு கோணப்பெருமான்என்றபெயர் உண்மையைத் தெரிவிக்கின்றன. மூல மூர்த்தி சிறிது வட புறமாகச் சாய்ந்திருப்பதை இன்றும் காணலாம். 'தொல்லை நீர்ப் புகலூர்க் கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே' என்று அப்பரடிகள் அருளியிருக்கிறார். இக் கோயிலுள்ள விநாயகருக்கு வாதாபிகணபதி என்ற பெயர் கல்வெட்டில் காணப்படுகிறது. அப்பர்மூர்த்திக்கு நித்திய பூசைக்காக நிவந்தம் ஏற்பட்ட செய்தியை முதல் இராஜராஜன் (கி.பி. 985-1012) காலத்திய கல்வெட்டு ஒன்று அறிவிக்கிறது. 'குளிச்செழுந்த நாயனார்' என்று அப்பர் குறிப்பிடப்படுகிறார். 'யாழ்மூரி நாயனார்' நக்கநாயனார்' என்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர் இவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

நம்பி முருகன் திருமடம் என்று முருக நாயனார் மடம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. பெரியபுராணத்தில் அப்பர் சுவாமிகள் ஒருவருக்கு மாத்திரம்தான் திருநட்சத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. திருநாவுக்கரசருக்குச் சித்திரைச் சதயத்தையொட்டிப் பத்துநாட்கள் விழாவும், வைகாசி மாதத்தில் பத்துநாட்கள் விழாவும் நடைபெறுகின்றன. இவ்வாறு நடந்ததைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இன்றும் இப்பெருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. கோயிலில் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வார்க்கு (தேவாரம் பாடுவார்க்கு)நிபந்தம் விடப்பட்டிருக்கிறது. திருமுறை மக்களால் மிகுதியும் கையாளப் பட்டதைக் கல்வெட்டுக்களில் காணப்படும் 'இம்மையே தருவாள்' 'பொய்யாத சேவடி' 'ஒளி வளர்விளக்கு' என்ற சொற்றொடர்களால் அறியலாம். சுவாமியின் பெயரை மக்களுக்கு இடுவதைக் 'கோணல் மகாதேவன்' 'கோணல் வடுகன்' என்று வரும் ஆட்சியால் தெரிந்து கொள்ளலாம். முடிகொண்டான் ஆற்று வடகரையில மனத்துக்கினியாள் என்பாள் செய்வித்த ஆதுலர் சாலைக்கு நிலம் விடப்பட்டிருக்கின்றது. திருப்புகலூர் அந்தாதி பாடிய நெற்குன்ற வாணரைப் பற்றிய குறிப்பு கல்வெட்டில் காணப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த அருள்மிகு கருந்தார்க் குழலி உடனுறை அருள்மிகு அக்கின்சுவரர் சுவாமியின் திருவடிகளைத்தொழுது பிறவிப்பயனைப் பெறுவோமாக.


# நாட் காலப் பூசையும், விழாக் காலப் பூசையும்,

— டாக்டர் பொற்கோ —
பேராசிரியர், தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.



"சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல வானோர்க்கும் ஈண்டு" என்ற திருக்குறளுக்கு உரையாசிரியர்கள் உரை சொல்லும்பொழுது சிறப்பு என்பது விழாக் காலப் பூசை என்றும் பூசனை என்பது நாட் காலப் பூசை என்றும் சொல்லுவார்கள். கோயில்களுக்கு நடக்கின்ற பூசைகளை இரண்டு விதமாகப் பிரித்து ஒன்றினை நாட் காலப் பூசை என்றும் இன்னொன்றினை விழாக்காலப் பூசை என்றும் கூறுகிறார்கள். அன்றாடம் நடக்கின்ற வழக்கமான பூசையை நாட்காலப் பூசை என்று குறிப்பிடுகிறோம். விழாக் காலங்களில் சிறப்பாக நடத்தப்பெறும் பூசைகளை விழாக்காலப் பூசைகள் என்று குறிப்பிடுகிறோம். இதைத்தான் திருக்குறளில் சிறப்பொடு பூசனைசெல்லாதுஎன்று குறிப்பிட்டார். முருகனுக்கு எல்லா நாள்களிலும் பூசை நடத்துகிறது சிறப்பு என்றாலும் கார்த்திகையில் நடக்கிற பூசைக்கு ஒரு தனிச் சிறப்புஉண்டு. ஆகவே கார்த்திகை ஒரு விழாக்காலப் பூசை என்று கொள்ளலாம். இதைப் போலவே பிள்ளையார் கோவிலில் தினந்தோறும் பூசை நடக்கிறது என்றாலும் விநாயகர் சதுர்த்தியின்பொழுது நடக்கின்ற பூசை சிறப்பான பூசையாகக் கருதப்படுகிறது. அதனை நாம் விழாக்காலப் பூசை என்று கொள்ளலாம்.

இவ்வாறு நம்முடைய மரபு முறையில் நாட்காலப் பூசை, விழாக்காலப் பூசை என்று பூசைகள் இரண்டு வகைகளாகப் பகுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.




அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

முன் தொடர்ச்சி

(விசுவரூப தரிசன யோகம்)

அமைதி இழந்தேன் அருள்புரிக! பல்லுலகாய்
அமைந்த பரமா! நயந்து. (,,)

கண்ணிலான் மக்களும் கர்ணன் துரோணருடன்
அண்ணலாம் பீஷ்மர் மற்று (11[26)

மன்னர் தளபதிகள் கோரவுன் வாயினுள்
நன்னலுற்று மாள்கின் றனர். (11[27)

பாரில் நதிகள் பலவும் விரைந்தோடி
வாரியில் வீழ்வது போன்று (11[28)

25. வீழ்ந்தன்றோ வீரர்கள் நும்எரி வாயினுள்
மாள்கின்றார் விட்டிலைப் போல். (11[29)

உன்தழல் வாயால் உலகை நசுக்கியே
தின் கின்றாய் நன்று சுவைத்து. (11[30)

இயம்புக நீர்யார் எனஎனக்கு; இங்கு
செயலிழந்து நிற்கிறேன் காண், (11[31)
(கண்ணபிரான் கூறிய விளக்கம்)

இந்த உலகை எரிக்கவே ஊழியாய்
வந்தவன் நானென் றுணர். (11[32)

இனிஇங்கு நீயில்லை என்றாலும்
கொன்றிடுவேன்
அன்னவர் யாவரையும் நான். (,,)

30. அருச்சுனா! போரிடுக! ஆட்சியைக்
கைப்பற்றல்
தருமமெனக் கொள்வதே நேர். (11[33)

இவர்களோ ஏற்கனவே என்னால் கொலை
யுண்டோர்;
இவண்ஓர் கருவியே நீ. (,,)

அவர்கள் அனைவரும் அன்றேஎன்
னால்மடிந்தோர்
கவலையின் றிக்கொள்க இன்று. (11[34)

(குறிப்பு : கேசவனுடைய இச்சொற்களைக் கேட்ட அருச்சுனன் கை கூப்பி வணங்கிக் கம்மிய குரலில் துதிக்கின்றான்) (11[35)

அருச்சுனன் கூறுகின்றான்:
அரக்கர்கள் அஞ்சிட நல்லோர் மகிழ
பரவிநின்ற னர்சித்தர் கள். (11[36)

தேவர்கள் தேவே! பிரமனுக்கு மூலமே!
ஆவதுண்டோ உம்மைவணங் காது? (11[37)

35. எண்ணில் உருவுடை ஈசனே! ஆதியே!
மண்ணுலகைச் சூழ்ந்ததொல் லோய்! (11[38)

உலகின் உறைவிடம் நீ; என்றும் அழி யாதான்;
உளரோ உமக்கொருவர் மேல்? (,,)

அறிபவனும் மற்றும் அறியும் பொருளும்
அறிவிப்போ னும்நீயே யாம். (,,)

வருணன் வாயு நெருப்பு பிரமன்
தருமன் அனைவரும் நீ தான். (11[39)

எல்லாமாய் எங்குமாய் எண்திசையும்
நிற்பவனே
இல்லைஉம் சக்திக்கே ஈறு. (11[40)

40. உன்பெருமை சற்றும் உணராது
(தாழனென்று
எண்ணியே செய்தேன் தவறு. (11[41)

பலமுறை உம்மைப் பலகேலிப் பேச்சால்
சலனமுறச் செய்தவன் நான். (11[42)

அன்பால் அறியாமையால் நான்செய்த
அத்தனையும்
மன்னிப்பாய் கண்ணா! மறந்து. (,,)

உலகின் பரமகுரு ஒப்பிலாத் தந்தை
உலப்பிலா சக்திநீ தான். (11[43)

காதலன் காதலியை மன்னித்தல் போன்று
மாதவா! மன்னித் தருள். (11[44)

காண்பரிய உம்வடிவைக் கண்டுநான்.
அஞ்சுகிறேன்
மாண்புடை முன்வடிவைக் காட்டு. (11[45)

பரந்தாமா! சங்குசக்ர பாணியாய் உன்தன்
பரபோகத் தோற்றத்தைக் காட்டு (11[46)

(குறிப்பு : இவ்வாறு வேண்டிய அருச்சுனனுக்கு கண்ணபிரான் அருள்கின்றார்:)

பார்த்திபா! யாரேனும் பார்த்தறியா
பேருருவை
பார்த்தாய் ஒள்மயமாய் நீ. (11[47)

(தொடர்ந்து வரும்)

# ஓம்
# விநாயகப்பெருமான் வணக்கம்


தமிழ்க்கடல்

சிவத்திரு இராய. சொக்கலிங்கனார்


வேழ முகத்து விநாயக போற்றி
பேழை வயிற்றுப் பிள்ளாய் போற்றி
ஏழைக்கு அருள்செய் எம்மான் போற்றி
வாழ வகுக்கும் வள்ளால் போற்றி
சிவனார் பெறும்முதற் செல்வா போற்றி
சேயிழை உமைதரு சிறுவா போற்றி
திருமால் தனக்கு மருகா போற்றி
திருமகள் மகிழுமாப் பிள்ளாய் போற்றி
யானை உரித்தவன் மகனே போற்றி
யானையைக் காத்தவன் மருமான் போற்றி
யானையின் கைபெறு கோனே போற்றி
யானையால் வள்ளியை வென்றாய் போற்றி
யானை மணாளனின் அண்ணா போற்றி
யானை முகத்தனை அழித்தாய் போற்றி
பெருச்சாளி ஏறும் பெரியோய் போற்றி
பேணுவார் பிழைகள் பொறுப்பாய் போற்றி
வள்ளிதெய் வானை மைத்துன போற்றி
வல்லபை மங்கை மணாள போற்றி
கடிமணம் விரும்பாக் கணேச போற்றி
மடியினில் மாதினை வைத்தாய் போற்றி
சித்தி புத்தியின் தெய்வமே போற்றி
முத்தி கொடுக்கும் முதல்வ போற்றி
மூலை முடுக்கெல்லாம் முளைத்தாய் போற்றி
மூவிரு முகத்தோன் முன்னவ போற்றி
சிதறுகாய் சிறுவருக்கு ஈவாய் போற்றி
சிவன்தேர் அச்சினைச் சிதைத்தாய் போற்றி
கொம்பு எழுத்தாணியாக்கொண்டாய் போற்றி
எம்பிரான்பிறையதில் இணைத்தாய் போற்றி
மலையினில் பாரதம் வரைந்தாய் போற்றி
மலைமகள் மகிழுமா மணியே போற்றி
முன்வணக்கங்கொள் முனைவ போற்றி
பன்னிரு தம்பிகண் எண்ணினை போற்றி
பின்னவன் முழமிடப் பிணங்கினை போற்றி
அன்னையின் அணைப்பால் ஆறினை போற்றி
எண்ணுவார் இடரைக் களைவாய் போற்றி
எண்ணார் இடர்உற இழைப்பாய் போற்றி
பரமன் மடியுறை பண்ணவ போற்றி
பார்வதி ஈன்ற பாலா போற்றி
அப்பம் அவல்பொறி கப்புவாய் போற்றி
இப்புவி எல்லாம் இருப்பாய் போற்றி
ஓங்கா ரப்பொருள் உணர்த்துவாய் போற்றி
தீங்கெலாம் அகற்றும் செம்மல் போற்றி
குட்டிக் குனிப்புறக்கொள்வாய் போற்றி
பட்டி தொட்டிஎலாம் படர்வாய் போற்றி
குளக்கரை தொறும்குடி கொண்டாய் போற்றி
அளப்பரும் ஆற்றல்கொள் அம்மான் போற்றி
அரசின் நிழல்அமர் அரசே போற்றி
பரசுவார் பவப்பணி அறுப்பாய் போற்றி
அறுகினை ஆசையோடு அணிவாய் போற்றி
உறுபெரு மோதகம் உவப்பாய் போற்றி
உலகீன்ற கன்னியின் குலமுதல் போற்றி
நலனெலாம் நம்பர்க்கு அருள்வாய் போற்றி
மலைபோல் வருதுயர் மாய்ப்பாய போற்றி
கலையெலாம் கருத்துள் வளர்ப்பாய் போற்றி
அலகிலா விளையாட்டு அயர்வாய் போற்றி
உலகெலாம் அடக்கிய உந்தியாய் போற்றி
மலைமகள் மடிதவழ் மைந்தா போற்றி
நலப் நுகர் அவர்திறம் நகைப்பாய் போற்றி
புலவர்க்கு விருந்தாய்ப் பொலிவாய் போற்றி
கலக லெனச்சிறார்க் கவர்வாய் போற்றி
பேரொளி பரப்பும் பெருமுடி போற்றி
பாரதம் எழுதிய ஓர்பிறை போற்றி
கூருறும் மற்றைக் கொம்பும் போற்றி
கார்என அருள்பொழி கண்இணை போற்றி
நான்மறை பகர்ந்தருள் நால்வாய் போற்றி
வான்குறை கேட்டருள் மாச்செவி போற்றி
மோதக மணநுகர் மூக்குப் போற்றி
பாதகப் புண்ணியப் பொலிமுகம் போற்றி
மண்முழுது அடக்கிய வயிறு போற்றி
கண்அகல் உந்திக் கமலம் போற்றி
வாரி வழங்கு, கை ஐந்தும் போற்றி
சீரியோர் முடிபடி திருவடி போற்றி
சிவனார் கோயிலில் திகழ்வாய் போற்றி
தவமாச் செல்வர்சொல் தவமே போற்றி
அம்பிகைக் கோயிலும் அமர்வாய் போற்றி
நம்பினார் துன்பெலாம் நலிவாய் போற்றி
தம்பி கோயிலும் தங்குவாய் போற்றி
உம்பரும் போற்றும் ஒருவ போற்றி
காளி கோயிலும் காப்பாய் போற்றி.
ஊழி தோறும் உலவாய் போற்றி
பெருமாள் கோயிலும் பிறங்குவாய் போற்றி
திருமால் தங்கைநற் செல்வா போற்றி
அடியார் கோயிலும் அமர்வாய் போற்றி
கடிசேர் அறுகணி கணபதி போற்றி
தனிப்பெருங் கோயிலும் சார்வாய் போற்றி
மனித்தரைக் கவர்தரு வள்ளால் போற்றி
எங்கும் இருக்கும் இறைவ போற்றி
மங்கலம் தொடங்கமுன் வருவாய் போற்றி
கங்கை அணிந்தவன் கனியே போற்றி
நங்கை உமைதரு புங்கவ போற்றி
எளிமையில் அருள்புரி இறைவ போற்றி
ஏழைகள் பங்கில் இருப்பவ போற்றி
தும்பிக் கை, பெறு தோன்றால் போற்றி
தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
அறிவு மதம்பொழி ஆனையே போற்றி
குறைவிலாப் பெருங்குணக் குன்றே போற்றி
கூத்துடை யான்தரு குமரா போற்றி
கூத்துகந்து ஆடும் குரிசில் போற்றி
சந்தி தோறு இருக்கும் தத்துவ போற்றி
சிந்தையுட் புகுந்த தேவா போற்றி
கணநாத போற்றி! சுயமுக போற்றி!
விநாயக போற்றி! விக்கின போற்றி
எண்ணிய ஈவாய் போற்றி! போற்றி!
புண்ணியப் பிள்ளையார் போற்றி! போற்றி!



# எல்லாமாக இருப்பவர்

டாக்டர் சாயிமாதா சிவபிருந்தா தேவி

திலகவதியார் ஆதீனம், புதுக்கோட்டை

எல்லாமாக இருப்பவன், அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருப்பவன் இறைவன். எல்லோருடைய இதயத்திற்குள்ளும் உறைபவன் இறைவன். எல்லாம் அறிந்தவன் இறைவன். அவனை ஒழிய அமரரும் இல்லை; அவனன்றிச் செய்யும் அருந்தவமும்வேறில்லை.

உயர்ந்த-சிறந்த-மேம்பட்ட அப்பெரும் பொருளுக்கு, யார் வைத்த பெயரோ, எப்பொழுது வைத்த பெயரோ, ஒரு பொதுவான பெயர்-'கடவுள்'. இந்த ஒரே சொல்லை, இரு கூறுகளாக பிரிக்கலாம். 'கட' எல்லோரையும் எல்லாவற்றையும் கடந்தது. கடந்து நிற்கும் ஒன்றால், நமக்கு யாது பயன்? என்ற எண்ணம் எழுந்துவிடக் கூடாதே ஆதலால் எல்லாவற்றையும், எல்லோரையும் கடந்து நிற்கும் அது, அதே தருணத்தில் 'உள்' நின்றும் உணர்த்துகிறது என்ற பொருள்படத்தான், கடந்து, உள் நின்று உணர்த்தும் அதற்கு 'கடவுள்' என்ற பெயரைப் பண்டைய தமிழர்கள்-பண்பாட்டுத் தமிழர்கள் இப்பெயரை சூட்டினார்கள். யார் வைத்த பெயரோ? எவர் வைத்த பெயரோ? ஒரு பொதுவான ஒரு மெதுவான, ஒரு அழகான ஒரு அற்புதமான, ஒரு அதிசயமான பெயராக, 'கடவுள்' என்ற பெயர் அமைந்திருக்கிறது.

மேல் நாடுகளிலே சிலர், 'எல்லா மதங்களுக்கும் ஒரே ஒரு கடவுள் இருக்க, இந்துக்களாகிய உங்களுக்கு மட்டும் முப்பத்து முக்கோடி கடவுளா?' எனக் கேட்கின்றனர்.

முப்பத்து முக்கோடிப் பேர்களும் கடவுளர்கள் அல்ல. முப்பத்து முக்கோடி தேவர்கள் என விளக்குகிறோம்.

''தேவர்கள் என்றால் யார்? அவர்கள் எப்படியிருப்பார்கள்? அவர்களின் தன்மை என்ன?'' என்றெல்லாம் கேட்கின்றனர்.

இதெல்லாம் புத்தி கூர்மையான கேள்விகளேயாம்.

''தேவர்கள் என்றால், மனிதர்களை விட உயர்ந்தவர்கள், அவர்களது கண் இமைக்காது, கால் தரையில் பாவாது. மனிதன், 'வையத்துள் வாழ்வாங்கு' வாழ்ந்து விட்டால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்று வள்ளுவர் சொல்லியுள்ளார். மனிதன் தன் தன்மையால், பண்பால், பரிவால், நன்னடத்தைகளால் தேவராகித் தெய்வமாக விளங்க முடியும் என நாம் விளக்கவுரை தருவதை மேல் நாட்டார் மனநிறைவுடன் கேட்டு மகிழ்கின்றனர்.

''நாம் வாழ மண் வேண்டும் அல்லவா?'

''ஆம் வேண்டும்'' என்கின்றனர்.

மண்ணுக்கொரு தெய்வம்-காஞ்சி ஏகாம்பரேஸ்வரர். மனிதர்கள், ஏனைய உயிர்கள் அனைத்தும் வாழ நீர் வேண்டும் அல்லவா?''

''ஆம் நீர் அவசியம் வேண்டும், நீரின்றி உலகில்லை''என்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

நீருக்கொரு தெய்வம் திருச்சிராப்பள்ளிக் கருகில் உள்ள திருவானைக்கா, ஜெம்புகேஸ்வரர்-இவரது கருவறைக்குள் நீர் ஊறிக் கொண்டே இருக்கும். நீருக்குரிய திருத்தலம் திருவானைக்கா. நிலத்தையும் நீரையும் போல மனிதனுக்கும் மற்ற உயிர்கட்கும் நெருப்புத் தேவையானது. இதற்கு ஒரு திருத் தலம் திருவண்ணாமலை, அண்ணாமலையார்.

ஜீவராசிகள் எத்தனை கோடி உண்டோ அத்தனையும் உயிர்வாழக் காற்று வேண்டும். காற்றுக்கொரு கடவுள் காளத்தீஸ்வரர். இதற்குரிய திருத்தலம் திருக்காளத்தி. எல்லா உயிரினங்களும் உயிர்வாழ ஆகாயம்-வானம் அவசியம் தேவை. ஆகாயத் திருத்தலம் சிதம்பரம். இறைவன் நடராஜப் பெருமான். இப்போது சொல்லுங்கள் பஞ்சபூதங்கள் ஐந்திதிற்கும் மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றிற்கு ஐந்து தெய்வங்கள் அவசியமல்லவா என்று கேட்டால் ஆம், ஆம். அவசியத்திலும் அவசியமே என்கின்றனர். எல்லோரும் இவற்றை இசைந்த பின்னர் ஊர்கள் ஐந்து, இறைப் பெயர்கள் ஐந்து; ஆனாலும் எல்லா வற்றையும் இயக்குபவன் 'ஒருவனேதான். என்று நாம் ஆணித்தரமாகக் கூறியதும் நம்மையே உற்று நோக்குகின்றனர். என்ன சொல்ல போகிறோமோ என்று மூச்சடக்கி இருக்கின்றனர்.

இறைவன் ஒருவனே; அவன் ஏகன், இதனையே வேதமும் ''ஏகோ தேவஹ'' என்கின்றது.

மணிவாசகரின் திருவாசகமும், ''ஏகன் அனேகன் இறைவனடி வெல்க'' என்கின்றது. ''ஏகனுமாகி அனேகனும் ஆனவன் நாதனும் ஆனான் என்றுந்தீபற, நம்மையும் ஆண்டா னென்று உந்தீபற'' எனச்சித்தாந்த திருவுந்தியாரும் செப்புகின்றன.

ஏதவன் ஊர்?
ஏதவன் பேர்?
யார் உற்றார்?
யார் அயலார் ?
ஏதவனைப் பாடும் பரிசு?''

என்று கேட்கும் திருவாசகம் ''ஒருருவம் ஓர் நாமம் ஒன்றும் இல்லார்க்கு நாம் ஆயிரம் திருநாமங்கள் பாடித்தெள்ளேணம் கொட்டுகிறோம்'' என்று குறிப்பிடுவதிலிருந்து, உண்மையை நாம் உணர்ந்து உய்தி பெற முடியும்.

''ஒன்று தான் அது''

என்பதற்கு மேலும் உதாரணம் நாம் சொல்வதுண்டு. சிவபெருமான்-நெருப்பு, அந்த நெருப் பிலே உள்ள சிவப்பு விநாயகர், அந்த நெருப் பிலே உள்ள ஒளி-சுப்பிரமணியம்', இதுதான் தத்துவம்.

''ஒன்றென்றிரு-தெய்வம் உண்டென்றிரு' என்று சித்தரும் செப்புவார். நீங்கள் எந்தக் கடவுளைஅல்லது எந்தத்தெய்வத்தை வணங்கினாலும் அங்கே 'மாதொரு பாகனார் தாம் வருவார்'' என சிவஞானசித்தியார் என்ற சித்தாந்த சாத்திரம் சாதிக்கின்றது..

''யாதொரு தெய்வம் கண்டீர் அங்கே அத்தெய்வமாக மாதொரு பாகனார் தாம் வருவார்.''''அவர் எப்போது வருவார்?''என்ற கேள்வியை திடீரென்று கேட்பார்கள். அவர் பகலிலும் வரலாம்; இரவிலும் வரலாம். அவர் அதிகாலையிலும் வரலாம். நடுப்பகலிலும் வரலாம். நள்ளிரவிலும் வரலாம். ஒரு பக்தருடைய கனவிலே அடிக்கடி கடவுள் வந்தார்.

''கனவிலே வரும் கடவுளே! அருட்பெருஞ்ஜோதி; தனிப்பெருங்கருணை தெய்வமே! எனது நனவிலே வரக்கூடாதா? என்று அந்த பக்தன் கேட்க, நாளை உன் வீட்டிற்கு வருகிறோம் என்று சொல்ல, பக்தன் விழித்துக் கொண்டான். பின்னர் உறக்கம் வரவில்லை. நாளை கடவுள் அல்லவா, இவனைத் தேடி இவ்னுடைய வீட்டிற்கு வர இருக்கிறார்! படுக்கையை விட்டு எழுந்தான். குறுக்கும் நெடுக்கும் நடந்தான்; மனைவியை எழுப்பினான்; மக்களை எழுப்பினான்;நாளை கடவுள் நம் வீட்டிற்கு வருகிறார். எல்லோரும் எழுந்திருங்கள். வீடு வாசலைக் கழுவிக்கோலம் போடுங்கள் என்றான். வீடு முழுவதும் சுத்தமானது. குருத்தோலை தோரணங்கள், மாவிலை தோரணங்கள் கட்டப் பெற்றன. வீடு முழுவதும் சாம்பிராணி மணம், ஊதுபத்தி வாசனை விளக்குகள் பல ஏற்றப் பெற்றன. வீடே கோவில் ஆகியது. வீட்டுக்கும் வாசலுக்கும் நடந்து கொண்டே இருக்கிறான் பக்தன்.

குடுகுடு கிழவன்; கூனிக்குறுகிய உடம்பு, தோலெல்லாம் தொங்குகிறது. எலும்பே உடம்பு, அந்த உடம்பிலும் வெண்குஷ்டம்; வெடவெடவென்று குளிரிலே நடுங்கிக்கொண்டு 'அம்மா தாயே பசிக்கிறது' என்று கூறிக் கொண்டு தெரு வழியே திருவோட்டை ஏந்தி வந்த முதியோன், பக்தர் வீட்டு வாயிலிலே

வந்து நின்றான். கடவுளை எதிர்நோக்கி காத்திருந்த பக்தனுக்கு கிழப்பிச்சைக்காரனைக் கண்டதும் சினம், மனத்திலே குதித்தது.

''கடவுளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நேரத்தில், இப்படியொரு குஷ்ட ரோகி வரலாமா? என்றெண்ணி, அக்கிழவனை ஓட ஓட விரட்டினான். உச்சிக்காலப் பொழுது ஆனது, பகல் பனிரெண்டுமணி, கடவுள் வரவிற்காக காத்து இருக்கும் இவனோ மனைவியோ, மக்களோ ஒரு சொட்டுத தண்ணீர் கூட அருந்தவில்லை. கடவுளை எதிர் நோக்கிப் பிரசாதங்கள், பழங்கள், வர்க்கான்னங்கள் பல காத்திருக்கின்றன. இடுப்பில் ஒரு குழந்தை, கையில் ஒரு குழந்தை, அருகில் ஒரு சிறுவன். மூவருடன், எலும்புடன் தோல் ஒட்டிய உருவில் பரட்டைத் தலையுடன், கிழிந்த உடல் தெரியும் அழுக்கு ஆடையுடன், ஒரு பிச்சைக்காரி ''ஐயா, சாமி! பசி உயிர்போகிறது. கஞ்சியாவது ஊத்துங்களேன்' என்று தெருவில், பக்தன் வீட்டு வாயிலில் நின்று கெஞ்சி அழுகிறாள்.

நான் கடவுளை எதிர்நோக்கும் வேளையில் இப்படி ஒரு தரித்திரப் பிச்சைக்காரியா? என்று வெஞ்சினங்கொண்டு, கல்லைத் தூக்கி எறிகிறான். அது அவள் காலிலேபட்டு, இருக்கிற கொஞ்ச இரத்தமும் சொட்டு சொட்டாக வடிய, அழுது புலம்பியபடி, தட்டுத்தடுமாறி பிள்ளைகளுடன் அவள் நடக்கிறாள்.

மாலை ஆயிற்று; கடவுள் இன்னும் வந்தபாடில்லை. மனைவி மக்கள் பசியால் வாடுகின்றனர். வயதான தாயோ பசியால் வேதனைப்படுகிறாள். வருகிறேன் என்ற கடவுள் ஏமாற்றிவிட்டாரா! என்று பக்தர் எண்ணுகிற போது, ஒரு சொறி நாய், வீட்டிற்குள்ளே புகுந்து, தட்டிலே வைத்துள்ள சர்க்கரைப் பொங்கலிலே வாயை வைத்து விட்டது. பார்த்தான் பக்தன், உஷ்ணம் தலைக்கு ஏறியது. வெறிபிடித்தவன் போல, ஒரு தடியை எடுத்து வந்து சொறிநாயை தாக்கினான். அது லொள் லொள் என்று குலைத்துக் கொண்டே ஓடியது. காத்திருந்த களைப்பு; பசிக்களைப்பு, எல்லாமாகச் சேர்ந்து, சோர்ந்து போய்ப் படுத்தான் பக்தன். கண்கள் மூடின. கனவில் கடவுள் வந்தார்;

''கடவுளே! வருகிறேன் என்று சொல்லி ஏமாற்றி விட்டீர்களே? என்றான். 'நானா ஏமாற்றினேன். நான் தான் மூன்று முறைகள் உன் வீட்டிற்கு வந்தேனே. வந்து என்னை அடித்து அடித்து இரத்தம் சொட்ட சொட்ட விரட்டிவிட்டு வரவில்லை என்றாகேட்கிறாய்?' என்றார்.

நான் அதிகாலையிலிருந்து இரவு வரை கண் இமைக்காமல் உங்கள் வரவு நோக்கியல்லவா காத்திருந்தேன். 'எப்பொழுது நீங்கள் வந்தீர்கள்? ஏன் பொய் சொல்லுகிறீர்கள்? என்று சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டான் பக்தன். அதற்குக் கடவுள், சிரித்துக்கொண்டே சொல்கிறார்:



காலையில் வந்த குஷ்டரோகி யார்?

நடுப்பகலில் பிள்ளைக்குட்டியுடன் வந்த பிச்சைக்காரி யார்?

இரவில் வந்த சொறி நாய்தான் யார்?

என்று கேட்க, பக்தன் வெட்கப்பட்டுத் தலை குனிந்தான்' என்று இப்படியொரு பழங் கதையைச் சொன்னதும் எல்லோரும் கவனமாகக் கேட்பார்கள்,

''வந்த மூவருமே கடவுளா?''.

ஆம், கடவுளேதாம். அவர் யாராகவும் வரலாம். எவராகவும் வரலாம். எவ்வுருவிலும் வரலாம். அவர்தாம் எங்கும் நிறைந்தவர்; எல்லா உயிர்களிலும் கலந்திருப்பவர் அல்லவா? என்றதும் வியப்புடன் நோக்குவார்கள். அந்த நேரத்தில், குறிப்பறிந்து அவர்கள் உள்ளத்தில் ஒன்றைப் பதிய வைப்பதுண்டு.

நான் சாதாரணமான ஆள், நான் நினைத்தால் கடவுளாக முடியாது. கடவுள் நினைத்தால், யாராக வேண்டுமானாலும் வரலாம். அப்படி வந்ததாக வரலாறுகளும் உண்டு என்று திருவிளையாடற் புராணம் பெரிய புராணம் முதலிய திருக்கதைகளை எடுத்து விளக்கம் சொல்வதும் உண்டு.

பெரிய புராணத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களில்பெரும்பாலானவர்கட்குஇறைவன் முதலில் சோதனை கொடுப்பான். சோதனையில், வேதனைப்படாது சாதனை புரிவோர் நாதனை கண்டு நல்லருள் பெற்றிருக்கின்றனர் என்ற விளக்கம், அவர்களது உள்ளத்தைத் தொடுவதுண்டு.

# அஷ்டலட்சுமியர் அருள் பெருவோம்!




'பத்மப்பிரியா'

திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள நாராயணருடன் வீற்றிருப்பவரே மகாலட்சுமி யாவார்.

மகாலட்சுமியின் கருணை அம்சமான எட்டுலட்சுமியர் அஷ்ட லட்சுமியர் எனப் போற்றப்படுகின்றனர்.

ஆதிலட்சுமி, தான்யலட்சுமி, தைரிய லட்சுமி, கஜலட்சுமி, சந்தானலட்சுமி, விஜய லட்சுமி, வித்யாலட்சுமி, தனலட்சுமி ஆகிய எண்மரும் அஷ்ட லட்சுமிகள்.

காஞ்சிப் பெரியவர் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள் மகாலட்சுமி மற்றும் அஷ்ட லட்சுமிகளை நமக்குப் புரிகிறபடி இவ்வாறு நயமாக விளக்கியுள்ளார்கள்.

''மகாலட்சுமி சமேத பகவான் ஜனாதிபதி என்றால்
ஆதிலட்சுமி நம்வாழ்வை ஆட்சிபுரியும் முதலமைச்சர்.
தானியலட்சுமி உணவு அமைச்சர்.
தைரியலட்சுமி பாதுகாப்பு அமைச்சர்.
கஜலட்சுமி அறநிலைய அமைச்சர்.
சந்தானலட்சுமி சுகாதார அமைச்சர்.
விஜயலட்சுமி போக்குவரத்து அமைச்சர்.
வித்யாலட்சுமி கல்வி அமைச்சர்.
தனலட்சுமி நிதியமைச்சர்.

## 1. ஆதிலட்சுமி

மனிதவாழ்வின் சுபிட்சங்களுக்கு ஆதி நாயகியாய்த் திகழ்பவள் ஆதிலட்சுமி.

முதலையின் பிடியில் சிக்கிய கஜேந்திரன் ''ஆதிமூலமே'' என்று கூவினான். மகாவிஷ்ணு கூட அந்த ''ஆதிமூலம் நான் இல்லை'' என்று வாளா இருக்க, பெருமாள் கையிலிருந்த சக்கரம் கஜேந்திரனைக் காக்கப் புறப்பட்டது. அந்த ஸ்ரீசக்கரம்தான் ஆதிலட்சுமி.

ஆதிக்கும் ஆதியான லட்சுமிதான் ஆதிலட்சுமி.

இரண்டு கரங்களோடு ஆதிலட்சுமி எழுந்தருளி, தெற்கு நோக்கி அமர்ந்திருக்கிறாள்.

மங்கலங்களுக்கெல்லாம் ஆதியான ஆதிலட்சுமி தன் பாதத்திற்குக் கீழ் பூர்ணகும்பம், கண்ணாடி, சாமரம், துஜம், ரிஷபம், பேரிகை, விளக்கு, ஸ்வஸ்திக் என்ற அபூர்வ மங்கல அம்சங்கள் அமைய வீற்றிருக்கிறாள்.

அவள் பொற்பாதம் பற்றியவருக்கு ''மங்களம் மங்களம் மங்களமே'' என உணர்த்த எட்டு மங்கலச் சின்னங்களைத் தன் பாதத்தின் கீழ் அமைத்துக் காட்டி, திருச்சேவை சாதிக்கின்றாள் எட்டு லட்சுமிகளிலும் முதல் லட்சுமியான ஆதிலட்சுமி.

## 2. தானியலட்சுமி




தானியலட்சுமி பசியைப் போக்குபவள், நம் உடலுக்குள் பசியை உருவாக்கி உண்ண வைப்பவளும் அவளே.

நம் ஜீவாதாரமான தானியங்களை, கீரைகளை, இன்னும் உணவுப் பொருள்கள் அனைத்தையும் அளிப்பவள் தானியலட்சுமி

தானியலட்சுமி ஆலயத்தில் மேற்கு நோக்கி சந்நிதி கொண்டிருப்பாள்.

ஆறு திருக்கரங்களுடன் சேவை சாதிக்கிறாள் அவள். அறுசுவைக்கும் அவள் நாயகி.

வலது கரங்களில் அபயஹஸ்தம், தான்யப் அம்பு, இடதுகரங்களில் வில், கரும்பு, வரத ஹஸ்தம்.

அவள் கரத்திலுள்ள வில்லும் அம்பும், இல்லாருக்கும் உணவு தேடி வென்று கொணர்ந்து அளிக்கும் அருளுக்குஅடையாளம்.

யானையை பீடமாகக் கொண்டு வீற்றிருந்த கோலத்தில் இருக்கிறாள் தாய்.

படியளந்து காக்கும் பெருமாளுக்கு அவளே கரம், அவளே காமதேனு, அவளே அமுதம்.

அமுதானவளை, அருளானவளை, அன்னமானவளை, அன்னையானவளைத் தொழுவோம்.

### 3. தைரியலட்சுமி




எட்டுத் திருக்கரங்களுடன எழுந்தருளியிருக்கிறாள் தைரியலட்சுமி. வலதுகரங்களில் அபயஹஸ்தம், சூலம், அம்பு, சக்கரம் இடது கரங்களில் வரதஹஸ்தம், கபாலம், வில், சங்கம்.


வடக்குதிசை வெற்றி திசை. வடக்குப்புறம் எழுந்தருளி வெற்றி வழங்குகிறாள் தைரியலட்சுமி.

''தாமரைப் பூவின்மீது வீற்றிருப்பவளும், உருக்கிய பொன் போன்ற நிறத்தினளும், உயர்ந்த கிரீடத்தை சிரசில் தரித்தவளும், தங்க நிறமான இரவிக்கை அணிந்தவளும், வலது கையில் அபய முத்திரை, இடது கையில் வரத முத்திரை; சக்கரம், சங்கு, வில், அம்பு, சூலம், கபாலம் இவற்றை ஏந்திய எட்டுக்கரங்களைக் கொண்டவளும் எல்லாருக்கும் எல்லாவிதமான மனோ திடத்தை அருளுபவளுமான தைரியலட்சுமியைப் பூஜிக்கிறேன்.''

என்று கூறுகிறது ஒரு வடமொழிஸ்லோகம்.

''என்னைப் பணிந்தவர்களின் வாழ்வில் நான் வளமாக பலமாக நிற்பேன்'' என்று புன்னகை பூக்கிறாள் தைரியலட்சுமி.

### 4. கஜலட்சுமி




இவளுக்கே இன்னொரு பெயர் இராஜலட்சுமி.

இருபுறமும் யானைகள் கலசம் ஏந்தி, அபிசேகித்துப் போற்ற எழுந்தருளியிருக்கும் இந்த லட்சுமியின் உருவமே பல நூற்றாண்டுகளாக லட்சுமியின் திருவுருவமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது.

இல்லங்களின் வாசற்படியில், சைவ வைணவ ஆலயங்களில் எல்லாம் யானைகள் இருபுறமும் கலசம் ஏந்தி அபிசேகிக்கும் கஜலட்சுமியின் திருவுருவமே அமைந்திருக்கக் காணலாம்.

நீர்கொண்ட கரியமேகங்களை யானைகளுக்கு உவமையாகக் கூறுவது வழக்கம். நீருண்ட மேகங்கள் நிலமகள் மீது மழை பொழிவதை இக்கஜலட்சுமியின் தோற்றம் குறித்து நிற்பதாக ஆய்வாளர்கள் தெளிவுபடுத்துகின்றனர்.

அனைத்துச் செல்வங்களுக்கும் ஆதாரமான மழையைப் பொழியச் செய்து பூமியைச் செழிப்பாக்குகிறாள் கஜலட்சுமி.

பொன், பொருள், புகழ், மற்றும் இறைவனைப் போற்றிப் பெருமையுடன் வாழும் புனித வாழ்வை வழங்குபவள் இராஜலட்சுமியான இக்கஜலட்சுமி.




### 5. சந்தானலட்சுமி

''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற''

என்று வள்ளுவர் போற்றும் அறிவறிந்த மக்கட்செல்வம் தருபவள் சந்தானலட்சுமி.

ஜடையையும், கிரீடத்தையும் தரித்தவளும்
வீற்றிருந்த திருக்கோலத்தில் சேவை
சாதிப்பவளும்
வரத அபய ஹஸ்தங்கள் கொண்டவளும்,
கத்தியைக் கையில் ஏந்தியவளும்,
ஆபரணங்களை அணிந்தவளும்,

கருணை நிரம்பியவளுமான சந்தான லட்சுமியைக் குழந்தைப் பேறு-சத்புத்திர யோகம் ஆகிய பாக்கியங்களுக்காக வணங்க வேண்டும்.

பிள்ளைப் பாக்கியமே பித்ருக்களைக் கடைத்தேற்றும் என்பது நம் ஐதீகம். சந்தான லட்சுமியைப் பூசித்தால் வெகுகாலமாகக் குழந்தைப்பேறு இல்லாதவர்களும் குழந்தைப் பாக்கியம் பெறுவர் என்பது திண்ணம்.

### 6. விஜயலட்சுமி



விஜயலட்சுமி

எண்ணத்தில் நிறைந்து வெற்றி அருளுபவள் விஜயலட்சுமி.

மும்மூர்த்திகளின் தெய்வீகச் செயல்களில்—அவர்களுடைய முத்தொழிலில்-மூவுலக மாந்தரின் முயற்சிகளில்-முக்காலமும் வெற்றி தர முழுமை கண்டு நிற்பவள் விஜயலட்சுமி.

எட்டாத கனவுகளை எட்டவைக்கும் வெற்றி நாயகியான விஜயலட்சுமி எட்டுத் திருக்கரங்களுடன் வீற்றிருந்த கோலத்துடன் திருக்காட்சி அருளுகிறாள்.


அம்ச வாகனத்தில் சேவை சாதிக்கும் விஜயலட்சுமி சர்வாங்க பூஜிதையாக கத்தி, கயிறு, சக்கரம், சங்கு ஆகிய வெற்றிச் சின்னங்களுடன் அபய, வரத ஹஸ்தங்களுடன் நம்மை ஆண்டு நிற்கிறாள் விஜயலட்சுமி.

அனைத்து வெற்றிகளையும் மங்களத்தோடு அளிக்கும் சர்வமங்களை விஜயலட்சுமி.

''சர்வ மங்கள மாங்கல்யே !
சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்பகே லட்சுமி
நாராயணி நமோஸ்துதே''

என்று விஜயலட்சுமியைத் துதித்தால் சகல நன்மைகளும் காரிய சித்தியும் உண்டாகும்.

### 7. வித்யாலட்சுமி



வித்யாலட்சுமி


கலைமகளையும், லட்சுமியையும் இணைத்து நிற்பவள் வித்யாலட்சுமி. வித்ய லட்சுமி கல்வியும் அளிப்பாள்; செல்வமும் கொடுப்பாள்.

''மிகவும் வெண்மையான உருவம் உடையவளும்
சங்க பத்ம வரத அபய ஹஸ்தங்களுடன்
கூடியவளும்
நூல்களை இயற்றிக் கொண்டிருப்பவளும்
நாதசொரூபமான பகவானின் சக்தி உருவம்
ஆனவளும் வித்யாலட்சுமியே''

என்று வித்யாலட்சுமியின் திவ்விய உருவத்தைப் போற்றுகிறது ஸ்ரீ ஜயாக்கிய ஸம்ஹிதை.

வித்யாலட்சுமியின் திருவருளால்தான் நான்கு வேதங்களும், ஆறு சாஸ்திரமும், அறுபத்து நான்கு கலைகளும், நம் பாரதத் திருநாட்டில் செழித்தோங்கி வளர்ந்து வருகின்றன.

வித்தையும் செல்வமும் நமக்கருள வித்யாலட்சுமியைத் துதித்திடுவோம்.





### 8. தனலட்சுமி

தலைடசுமியின் கடைக்கண் பார்வை எங்குவிழுகிறதோ அந்த இடத்தில் அனைத்துச் செல்வங்களும் ''நான், நீ'' என்று போட்டிப் போட்டுக் கொண்டு குவிகின்றன.

''சங்க பதுமநிதிகளை வைத்திருக்கும் தேவி'' என்று தனலட்சுமியைப் போற்றுகிறது ஸ்ரீப்ரஸ்ந ஸம்ஹிதை.

தங்க நிறமுடையவளும், சகலவித ஐசுவரியங்களை அணிந்தவளும், சுகமான ஆசனத்தில் வீற்றிருப்பவளும், பூர்ணகும்பம், சக்ரம், அம்பு, வெற்றிலை, சங்கு, தாமரைவில், கிண்டி இவற்றைத் தரித்தவளுமாகதனலட்சுமி விளங்குகிறாள்.

குபேரன் சாட்சாத் சீனிவாசப் பெருமாளுக்கே கடன் கொடுக்க முடிந்தது என்றால் அதற்குத் தனலட்சுமியின் திருவருள் காரணம்.



## திருத்தேர் வெள்ளோட்ட விழா

**திருப்புக்கொளியூர் அவிநாசி அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் ஆலய புதிய தேர் வெள்ளோட்ட விழா 28-1-93 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. 50 லட்சம் செலவில் இப்புதிய தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெற்றது. வெள்ளோட்ட விழாவில் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திருமிகு கே. ஏ. செங்கோட்டையன் அவர்கள் மற்றும் பேரூர் ஆதீனம் சாந்தலிங்க சுவாமிகள் உள்ளிட்ட சான்றோர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.**

## அடியார்க்கும் அடியராம்

# சுந்தரமூர்த்திநாயனார் அருள் வரலாறு

அன்பு அருணாசல அடிமை

**திருக்கோயில் கட்டுரையாசிரியரான திருப்பாதிரிப்புலியூர் அன்பு அருணாசல அடிமை அவர்கள் அண்மையில் இறைவனோடு ஐக்கியம் ஆனார்கள், அவர்தம் நினைவாக இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.**


ஸ்ரீ கயிலாயத்தில் சிவபெருமானுக்கும் பார்வதி தேவியாருக்கும் பூமாலை கட்டிச் சாத்துந் திருத்தொண்டு செய்து கொண்டிருக்கும் ஆலாலசுந்தரரும், அனிந்திதை, கமலினி என்னும் தோழிகளும் ஒருநாள் புஷ்பம் எடுக்கும் போது வினைவலியால் ஒருவரை ஒருவர் கண்டு மோகங்கொண்டு புஷ்பம் எடுத்துச் சென்றனர். இச்செய்கையை யறிந்த கயிலாயபதி சுந்தரரை நோக்கி ''உன் மனம் உமையவள் தோழிகள்பாற் சென்றமையால் நீ அவர்களுடன் பூலோகத்திற் பிறந்து இன்பமனுபவித்துப் பின்பு இங்கு வந்து சேரக்கடவாய்'' என்று கட்டளையிட்டருளினார். இதனைக் கேட்ட ஆலாலசுந்தரர் மனங்கலங்கி அடிபணிந்து அடியேன் பிழைபொறுத்து மானிடராய் மயங்கும்போது தடுத்தாட் கொள்ளல் வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்ய, சுவாமி அவ்வாறே கிருபை செய்தருளினர்.

ஆலால சுந்தரர் கைலாசபதி கட்டளைப்படி திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனாரென்னும் ஆதிசைவருக்குத் திருமைந்தராய் அவதரித்து நம்பியாரூரர் என்னுந் திருநாமம் பெற்று சீராட்டுடன் வளர்ந்து வீதியில் சிறுதேருருட்டி விளையாடிக்கொண்டிருக்கும்போது அந்நாட்டு அரசராகிய நரசிங்க முனையர் என்பவர் கண்டு சடையனார் சம்மதத்தின் பேரில் நம்பியாரூரரைத் தமக்குப் புத்திரராகப் பெற்றுப் பிராமணாசாரத்திற்குரிய சகலவேதாகமங்களையும், அரசகுலத்திற்கு வேண்டிய வில் வித்தை முதலாகியதும் கற்பித்துச் சிறப்புடன் வளர்ந்து உபநயனமுஞ் செய்வித்தனர்.

சடையனார் தமது புத்திரர் கலியாணப் பருவமடைந்ததை அறிந்து விவாகஞ் செய்ய விருப்பம் கொண்டு தம்மரபுக்கேற்ற, புத்தூர் சடங்கவியார் குமாரத்தியை மணம் பேசி முடித்தனர். பின்பு நம்பியாரூரர் திருமணக் கோலம் பூண்டு மங்கல வாத்தியங்களுடன் புத்தூருக்குச் சென்று கலியாணச் சடங்கிலிருக்கும் போது, சிவபெருமான் முன்னங் கயிலாயத்தில் அருளியபடித் தடுத்தாட்கொள்ளும் பொருட்டு வயோதிகப் பிராமண வடிவங் கொண்டு கலியாண மண்டபம் அடைந்து நம்பியாரூரரை நோக்கி ''உன்னிடத்தில் எனக்கோர் வழக்கிருக்கிறது. அதனைத் தீர்க்காது நீ விவாகஞ்செய்து கொள்ளக்கூடாது'' என்றனர். நம்பியாரூரர் அவ்வழக்கு யாது? என்ன? சிவபெருமான் சபையோரைப் பார்த்து இவ்வாரூரன் எனக்கடிமை என்றனர். நம்பியாரூரர் நகைத்து நீர் சொல்லும் வார்த்தை நன்றாயிருக்கின்றதென்ன சுவாமி ''அப்பா! உன்னுடைய பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமை ஓலையிருக்க நீர் நகைப்பானேன்'' என்றனர்.

ஆரூரர் சுவாமியை நோக்கி ''அந்தணர் அந்தணர்களுக்கு அடிமையாகுதல் இவ்வுலகில் வழக்கம் இல்லையே நீ பித்தனோ'' என்றார். அதற்கு சுவாமி ''நான் பித்தனானாலும் ஆகுவேன். பேயனானாலும் ஆகுவேன். நான் ஒன்றுக்கும் அஞ்சேன். நீ வேடிக்கை வார்த்தையாடலாகாது. நமக்கு அடிமை செய்ய வேண்டும்'' என்றனர். இதைக்கேட்ட ஆரூரர் கோபத்தோடு ''ஏதோ ஓரோலையிருக்கிறதென்றீரே அதைக் காட்டும்'' என்ன சுவாமி ''நீயோ ஓலையைக் காணத்தக்கவன்; அன்று; சபையோர் பார்த்துச் சொல்லியவண்ணம் நடக்கத்தக்கவனே'' என்றார். அதற்கு ஆரூரர் கோபங்கொண்டு வயோதிகரிடமிருந்த ஓலையைப் பறித்து கிழித்து விட்டனர். சுவாமி அவரைப் பிடித்துக் கொண்டு முறையோ முறையோ வென்று ஓலமிட்டனர். சபையிலுள்ள மறையவர்கள் இவர்களை விலக்கி சுவாமியைநோக்கி 'உலகில் நடவாத வழக்குத் தொடுத்து வந்து இங்கே முறையிடுகின்ற நீர் எங்கிருப்பவர்'' என்றார்கள்.

சுவாமி ''சபையோர்களே! என்னுடைய ஊர் தூரமன்று, அருகிலுள்ள திருவெண்ணெய் நல்லூரே. அது இருக்கட்டும். இவன் என்னிடமிருந்த ஓலையைப் பறித்துக் கிழித்து எனக்கடிமையென்பதை நிசப்படுத்தினான்'' என்றார். அப்போது ஆரூரர் இந்த மறையவர் பழைய மன்றாடியாயிருக்கின்றாரென்று கூறி சுவாமியினுடைய தப்பு வழக்கினை அங்கே சொல்லிக் கொள்ளுங்கள் புறப்படு மென்றனர். அவ்விடமே சென்று நீ அடிமையென்பதனைச்



சாதிக்கின்றேனென்று தண்டூன்றி முன்னே சென்று திருவெண்ணெய் நல்லூரையடைந்து அங்குள்ள சபையோர்களைப் பார்த்து இந்த ஆரூரன் நமக்கடிமையென்று நான் காட்டிய ஒலையைக் கிழித்து இங்கே வந்திருக்கிறான் என்ன அச்சபையோர் ஆரூரரை நோக்கி உம்முடைய எண்ணம்யாது சொல்லும் என்றார்கள்.

''நான் ஆதிசைவ அந்தணனென்பது நீங்களறிந்த விஷயமே. அப்படியிருக்க இந்த மறையவர் தனக்கடிமையென்று சாதித்தால் நான் சொல்வதென்னை? இம்மாதிரியான காரியத்தில் எனக்கொன்றுந் தோன்றவில்லை'' யென்றார். சபையோர் ''சுவாமியை நோக்கி இவரை உமக்கடிமையென்று சொல்லுகின்றீரே'' அதற்கு உம்மிடத்தில் அடிமை சீட்டு, அடிமையாண்டது, பார்த்தவர்கள் ஆகிய இம்மூன்றில் யாதேனுமொன்றுளதாயின் காட்டுமென்றார்கள். ஆனால் முன்போல் இவன் என்மேல் வீழ்ந்து ஓலையைக் கிழிக்க வொட்டாமற்தடுப்பீர்களாயின் காட்டுகிறேனென்று சொல்லி மறைவாகச் சென்று ஓலையைக் கொண்டு வந்து காட்டி அதில் ''திருநாவலூரிலிருக்கும் ஆதிசைவ மறையவனாகிய ஆரூரன் என்னும் பெயருள்ள நான் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு எழுதிக் கொடுத்தமுறியோலையாவது: இந்தத் தேதி முதல் யானும் என் பரம்பரையாய் இனி வருகின்றஎன் சந்ததியாரும் கொத்தடிமைசெய்யும்படி மனம்வாக்கொத்து எழுதிக்கொடுத்தேன் இதற்கு இதுவே என் கையெழுத்து. என்று எழுதியிருக்கக் கண்டு சபையோர் ''இந்தக் கையெழுத்து உம்முடைய பாட்டனார் கையெழுத்துதானா? தெளியப் பார்த்துக் கொள்ளு''மென்றார்கள்.

அப்போது சுவாமி, உங்கள் சந்தேகந் தெளியுமுன் இவன் பாட்டனெழுதியவோலையை ஒப்பிட்டுப் பார்த்து உங்களுக்குத் தோன்றியதைச் சொல்லுங்களென்றார். சபையோர் அப்படியே அவர் பாட்டனார் எழுதிய சில வோலைகளை யழைபபித்துப் பார்த்து இரண்டுமே சரியாக ஒத்திருக்கக் கண்டு ''ந்ம்பியாரூரரே! நீர் தோல்வியடைந்தீர்! இனி இந்த மறையவருக்கு அடிமை செய்ய வேண்டுவது என்று'' சொல்ல, ஆரூரர் ஒத்துக் கொண்டார்.

பின்பு சபையோர் சுவாமியை நோக்கி ''அய்யரே! உமக்கு இவ்வூரில் மாளிகை எங்கே என்றுகேட்க ''காட்டுகிறேன் வாருங்க''ளென்று யாவரும் பின்தொடர்ந்து வரச் சென்று அருட்டுறையென்னும் ஆலயத்துக்குள்ளே போய் மறைந்தனர். அது கண்டு யாவரும் திகைத்து நிற்க நம்பியாரூரர் தொடர்ந்து அழைக்க சுவாமி டார்வதி தேவியாரோடு ரிஷபயாரூடராய்த் தோன்றி நீ முன்னே

நமக்குத் தொண்டன், கயிலாயத்திலே நந்த வனத்தில் நீ கண்ட மாதர்களிடத்தில் இச்சை வைத்ததனால் நம்முடைய கட்டளைப்படி இங்கு வந்து உதித்தனை. இப்பாச பந்தம் உன்னைத் தொடராவண்ணம் நாம் தடுத்தாட் கொண்டோம்'' என ஓசையுண்டாகியது!

அவ்வோசையைக் கேட்ட நம்பியாரூரர் ஆனந்தத்தோடு இருகைகளையும் சிரமீதேற்றிக் குவித்துத் துதித்தனர். சிவபெருமான் மீண்டும் ஆரூரரை நோக்கி ''அப்பனே! நீ நம்முடன் வன்மை பேசினமையால் உனக்கு வன்றொண்டர் என்று பெயர் கொடுத்தோம், நீ துதி செய்யும் பாடலே நமக்கு அர்ச்சனையாகும். ஆதலால் நம்மைப் பாடக் கடவை'' என்று அருளிச் செய்ய, நம்பியாரூரர் பணிந்து ''இறைவா! அடியேன் என்னென்று பாடுவேன்?'' என்ன, 'நீ முன்னம் நம்மைப் பித்தனென்று உரைத்தனை. அதனையே முதலாகக் கொண்டு பாடக்கடவாய்' என்று அருளிச்செய்ய, நம்பியாரூரர் அதையே முதலடியாகக் கொண்டு, 'பித்தா பிறைசூடி' என்று பதிகமோதித் துதித்தனர். சிவபெருமான் திருவுள மகிழ்ந்து இனி இவ்வாறே தலங்கள் தோறுஞ் சென்று நம்மைப் பாடக் கடவாய் என்று கட்டளையிட்டு அருளினார்.

பிறகு வன்றொண்டர் திருத்துறையடைந்து ''தம்மானையறியாத' என்னுந் திருப்பதிக மோதித் துதித்துச் சிதம்பரத்துக் கெழுந்தருளிப் பதிகமோதித் துதித்துக்கொண்டிருக்கும்போது, நீ திருவாரூருக்கு வரக் கடவாயென்று அசரீரி வாக்குண்டாக, அவ்வாறே திருவாரூரை யடைந்தனர். அங்கே சுவாமி நம்மை உனக்கு தோழனாகத் தந்தனம் என்று அசரீரியாக அருளிச் செய்ததைக் கேட்டுப் பதிகமோதித் துதித்துத் நம்பிரான் தோழன் என்னும் திருநாமமும் பெற்றுத் தியாகராசப் பெருமானைத் தரிசித்துக் கொண்டிருந்தனர்.

முன் கயிலாயத்தில் பார்வதிதேவியாருடைய சேடியர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்மீது இச்சை கொண்டமையால் தேவியார் ஆக்ஞையின்படி அவர்களில் அனிந்திதையார் திருவாரூரில் உருத்திரகணிகையாய் அவதரித்து பரவையார் என்னுந் திருநாமத்தோடு வளர்ந்து புற்றிடங்கண்டாரைத் தரிசித்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்டு இம்மாதைத் தாம் விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்று சுவாமியைப் பிரார்த்திக்க, சுவாமி தமது திருத்தொண்டர்களுடைய சொப்பனத்திற்தோன்றி கட்டளையிட்டபடி அவர்கள் விவாகஞ் செய்து முடித்தனர். பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு நாள் விறன்மிண்டர் தூண்டுதலில் அங்குள்ள திருத்தொண்டர்களை நோக்கி இவர்களுக்கு நான் அடியனாகும் நாள் எந்நாளோ வென்னும் எண்ணத்தோடு சுவாமியைத் தரிசித்துக் கொண்டிருக்கும் போது சுவாமி 'தில்லைவாழ்ந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று முதலடியெடுத்துக் கொடுக்கச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதனையே முதலாகக் கொண்டு பதிகம் பாடித் திருத்தொண்டர்களுடன் சேர்ந்தனர்.

## நெஞ்செல்லாம் நெடுமாலே !

'சரயு'

நெடுமாலே நின்புகழ் நான் பாடவல்லலேனோ!
நீர்வண்ணா நின்னையும் நான் நினைக்க வல்லலேனோ.
(நெடு)

மங்கள நன்னாளில்மனம் விழித்தது
மால்கய உருவை என்மனம் நினைத்தது
திங்கள் மறைந்திருள் தேயும் காலையில்
திக்கெல்லாம் கண்ணனையே என் கண் கண்டது.
(நெடு)

இருள்போய் கதிரொளி எழுந்த போதிலே
இராமா என்றே என்நா இசைத்தது
மருள் தோய் அவாக்கடல் ஆழ்ந்து விடாமல்
மன்னு திருமாற்கே என்மனம் தொழுதது
(நெடு)

எண்ணிய எண்ணிய வாறெய்தி வேண்டினேன்
எழில் பரசுராமர் என் இதயம் வந்திட்டார்
மண்ணாசை மாலையிலே மருண்ட என் மனம்
மலர்ச்சியுற வாமனனே வருக என்றேன்.
(நெடு)

கையொடு கால்முடங்கி கண்மயங் கையில்
காத்தருள் நரசிம்மா எனஎன நா நவின்றது
மெய்யெனும் இப்பொய்யுடல் மீண்டும் வாராமே
பேலோய்! பலராமா! வாராய் என்றேன்.
(நெடு)

கன்று காக்கும் தாயெனக் காத்தென்னுயிர்க்
கட்டெல்லாம் களையப்பா திருமலை அப்பா
என்றும் உனக்கே நான் என்னை அளித்தேன்
ஏழுமலை வாசா இனி எல்லாம் நின் அருளே!
(நெடு)

**இனி எல்லாம் நின் அருளே !**

பிறகு ஒரு நாள் வன்றொண்டர் திருக்கோயிலுக்குச் சென்று குண்டையூர்க்கிழார் கொடுத்த நெற்களைப் பரவையார் திருமாளிகையில் சேர்க்கும்படி பதிகம் பாட, அவற்றைச் சிவகணங்கள் கொண்டு வந்து சேர்க்கப் பெற்று கோட்புலி நாயனார் புத்திரிகளாகிய சிங்கடி, வனப்பகை என்பவர்களைத் தமக்குப் புத்திரிகளாகக் கொண்டு, தாம் பாடிய திருக்கடைக் காப்பிலும் ''சிங்கடியப்பன்'' என்றே பதிகமோதி, திருப்புகலூருக்குக்கெழுந்தருளப் பரமசிவனைப் பணிந்து பதிகமோதி, செங்கல்லைத் தலைக்கு அணை வைத்துத் துயின்று எழுந்த போது சுவாமி செங்கல்லைப் பொன்னாகச் செய்து கொடுக்கப் பெற்றுக் கொண்டு, அநேக தலங்களைப் பணிந்து கொண்டு திருமுதுகுன்றம் போய்ப் பொன் வேண்டிப் பதிகம் ஓத, சுவாமி கொடுத்த பன்னீராயிரம் பொன்னையும் மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் சேரும்படிச் செய்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து, அங்கு நின்றும் பல தலங்களைப் பணிந்து கொண்டு போய் கமலாலய தீர்த்தக்கரைமேலிருந்துதாம்குளத்துக் குள்ளே யிறங்கி முன்மணிமுத்தா நதியிலிட்ட பொன்னை தடவிப் பார்க்க அகப்படாமையால்

சிவபெருமான் திருவிளையாட்டென்று கருதிப் பதிகமோதிப் பன்னீராயிரம் பொன்னையும் எடுத்துக் கொண்டு தம் திருமாளிகை வந்து சேர்ந்தனர். சில நாட்கள் அங்கு தங்கி யிருந்து மறுபடியும் புறப்பட்டுப் பல தலங் களையும் பணிந்து கொண்டு திருக்கருகா வூருக்குப் போகும் போது சிவபெருமான் மார்க் கத்தில் ஒரு சோலையை யுண்டாக்கி ஒரு மறைய வரைப்போலிருந்து தம்பிரான் தோழரை நோக்கி ''இங்கே கட்டமுதும் தண்ணீருமிருக் கின்றது. பசியாறிப் போகலாம்' என்ன, அவர் அவ்வாறே பரிசனத்தோடு பசி தணித்துக் கொண்டு அவ்விடத்தில் சயனித்திருக்கச் சிவ பெருமான் சோலை முதலானவைகளுடன் மறைந்தருளினர்.

பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் நித்திரை விட்டெழுந்து பார்க்க, ஒன்றுங்காணாமையால் இது சுவாமி அவர்களின் கிருபையென்று தொழுது திருப்பதிக மோதித்திருக்கச்சூருக்கு வந்து பசியோடுயிருப்பதைக் கண்ட சிவபெரு மான் ஒரு மறையவர் வடிவத்தோடு வந்து மறையவர் வீட்டில் அன்னம் வாங்கிக் கொடுக் கப் புசித்துப் பசிநீங்கிப் பார்த்தபோது மறைய வரைக் காணாமையால் இது திருவருட்செய லென்று திகைத்துப் பதிகமோதி, அங்கிருந்து புறப்பட்டு பல தலங்களையும் துதித்துக் கொண்டு திருவொற்றியூருக்கு வந்து பதிக மோதி திருத்தொண்டு செய்து கொண்டிருந் தனர்.

அங்கே முன் பார்வதிதேவியார் கயிலா யத்திலே கட்டளையிட்டபடிக் கமலினியார் என்பவர் திருவொற்றியூரை அடுத்த ஞாயிறு என்னுங் கிராமத்தில் வேளாளர் குலத்தில் ஞாயிறுகிழாருக்குப் புத்திரியராகப் பிறந்து சங்கிலி நாச்சியார் என்னும் திருநாமம் பெற்று வளர்ந்து பருவம் வந்த பிறகு திருவொற்றி யூரை யடைந்து ஆலயத்தில் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவர் மீது இச்சை கொண்டு சிவ பெருமான் முன்னிலையில் மகிழமரத்தடியில் உனைப் பிரியேன் என சத்தியம் செய்து கொடுத்து விவாகஞ் செய்து கொண்டு சில நாளங்கிருந்து சுவாமி தெரிசனஞ் செய்து கொண்டிருக்கும்போது திருவாரூருக்குப்போகப் புறப்பட்டுத் திருவொற்றியூர் எல்லையைவிட்டு நீங்கினார். உடனே இருகண்களும் மறைந்தன. அதனால் வருந்தினார். திருவெண்பாக்கத்தில் இறைவன்ஊன்றுகால் ஒன்றைஅருளி'உளோம் போகீர்'' என்றனர். பின் காஞ்சீபுரத்தை யடைந்து ஆலயத்துட் சென்று பதிகமோதி ஒருகண் (இடக்கண்) பெற்றுத் திருவாரூரை யடைந்து பதிகமோதி மற்றொரு கண்ணும் பெற்றுச் சிவபெருமானைஇருமுறைபரவையார் மாளிகைக்கு தூதுவிடுத்து அவர் கொண்டிருந்த ஊடலை நீக்கச் சிவபெருமானை துதித்துக் கொண்டிருநதனர். சிவபெருமான் அர்ச்சகர் வடிவம் கொண்டு, பரவையாரிடம் செனறு அவர் கொண்டிருந்த ஊடலை நீக்கி முன் போல ஐக்கியமாய் கூடியிருக்க அருள்புரிந்தார்.

இவ்வாறிருக்கும்போது சேரமான் பெரு மாள்நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காணும் விருப்பத்தோடு புறப்பட்டு வந்து கண்டு ஒருவரை ஒருவர் வணங்கிப் பரவையார் திருமாளிகையில் எழுந்தருளியிருக்கும்போது, இருவரும் சேரமான் பெருமாள்நாயனார் நகர மானகொடுங்கோளூரையடைந்துஅவ்விடம் சில நாள் அவர் திருமாளிகையில் தங்கியிருந்து வன் றொண்டர் திரும்பியபோது சேரமான்பெரு மான் நாயனார் கொடுத்த திரவியங்களை வழி யிற் பறி கொடுத்துப் பதிகமோதி அப் பொருள்கள் திருமுருகன் பூண்டி கோபுரவாயி லிருக்கக் கண்டு எடுப்பித்துக் கொண்டுபோய் பரவையார் திருமாளிகையில் சேர்ப்பித்தார்.

இவ்வாறிருக்கும்போது மறுபடியும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள்நாய னாரைக் காணப புறப்பட்டுத் திருப்புக்கொளி யூரிற் சென்று அங்கே முதலையுண்ட பிள்ளையைப் பதிகமோதி வருவித்துக் கொடுத் துத் திருவஞ்சைக் களத்துக்குப் போய் சுவாமி யைத் தரிசித்து அடியேனுக்கு இப்பந்தத் தொடக்கறுத்து அருள்புரிய வேண்டுமென்று துதித்துப் பதிகமோத சிவபெருமான் கிருபை கூர்ந்து பிரம விஷ்ணுக்கள் முதலிய தேவர் களை நோக்கி நமதன்டனாகிய வன்றொண் டனை வெள்ளையானையின் மீதேற்றி யிங்கு அழைத்துக் கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டனர்.

# நூல் மதிப்புரை

நூல் பெயர்: ***திரையில் பூத்த இறை எழில் மலர்கள்***

நூலாசிரியர்: *த. நா. இலட்சுமிபதி*

பக்கம் : 72

விலை : ரூ. 10.

வெளியிட்டோர்: ஜெயலட்சுமி பதிப்பகம்
91, சாமிநாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 6000002.

எம்மதமும் சம்மதம் என்பது உயரியநிலை. எம்மதமும் என் மதம் என்பது அதனினும் உயரிய விழுமிய நிலை. அத்தகைய ஒப்பற்ற நிலையை உலகம் காண்பதற்கு திரை இசை யுலகம் எத்தகைய அற்புதப் பணியை ஆற்றி வருகிறது என்பதை இந்நூலில் மிகச் சிறப் பாகச் சித்தரித்திருக்கின்றார் நூலாசிரியர் சேவா ரத்னம் திருமிகு த. நா. லட்சுமிபதி அவர்கள்.

தெய்வபக்தி, தேசபக்தி, தாய் தந்தை பக்தி, சமயபக்தி, ஒழுக்க பக்தி— இத்தனை யும் வலியுறுத்தும் நன்னூல் இந்நூல்.

அவர்கள் அவ்வாறே சென்று வன்றொண்டரைப் பணிந்து வெள்ளானை மீதேற்றி அழைத்துக்கொண்டு போக, சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது நண்பராகிய சேரமான் பெருமாள்நாயனாரை நினைக்கநாயனார் அதனை அறிந்து குதிரையின் மீதேறித் திருவஞ்சைக் களத்துக்கு வந்து பார்த்தபோது, வன்றொண்டர் எழுந்தருளியதைக் கண்டு தம் குதிரையின் காதில் சிவ மந்திரத்தை (திருவைந்தெழுத்து) ஓதி ஆகாய மார்க்கமாகச் சென்று சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிரதட்சணஞ் செய்து கொண்டு யானைக்கு முன்னே போயினர்.

சேரமான் பெருமாள்நாயனார் முன் செல்ல பின்சென்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''தானெனை முன் படைத்தான்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடிக் கொண்டு கைலாச மலையின் தெற்கு வாயிலுக்கு முன் போனார்.

போன உடனே இருவரும் யானையினின்றும், குதிரையினின்றும், இறங்கி பல வாயிற்களையும் கடந்து சிவசந்நிதி அடைந்தார்கள். அங்கே சேரமான் பெருமான் நாயனார் திருநந்திதேவரால் தடைப்பட்டு நிற்க, சுந்தரமூர்த்தி சுவாமிகள் உள்ளே போய் சுவாமிகள் சன்னிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து பன்முறை ஸ்தோத்திரம் செய்து கொண்டு நின்றார். சுவாமி அவரை நோக்கி ''சுந்தர வந்தனையோ'' என்றார். அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''சுவாமி, அடியேன் செய்த பிழை பொறுத்து என்னையடிமையாகக் கொண்டு பந்தத்தினின்று நீக்கி அடியேனுக்கு திருவடி தந்தருளிய பெருங் கருணையை என்னாற் சொல்லுந் தரத்ததோ'' வென்று சொல்லி பலமுறை நமஸ்காரஞ் செய்து சிவானந்தப் பெருவெள்ளத்தில் ஆழ்ந்து நின்றார். பின்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவரீருடைய திருவடிகளை அடையும் பொருட்டு சேரமான் பெருமாள் திருவணுக்கண் திருவாயிலின் புறத்தே வந்து நிற்கின்றார் என்று சொல்ல, சுவாமி அவரை (சேரமானை) உள்ளே அழைப்பித்து ''நீயும்ஆலால சுந்தரனும் நம்முடைய கணங்களெல்லாவற்றிற்கும் தலைவராயிருங்க'ளென்று அருளிச் செய்தார். அதைக் கேட்டு சேரமான்பெருமாள் நாயனார் சுவாமியை நமஸ்கரித்து எழுந்து அவருடைய திருவருளைத் தலைமேற்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆலால சுந்தரராகி முன்னே தாம் செய்த திருத்தொண்டைச் செய்பவரும், சேரமான் பெருமாணாயனார் கணநாதராகி அவர் செய்யும் தொழிலைச் செய்பவரும் ஆனார்கள்.

முன்னே பூமியில் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் இறையருளால் கயிலாயமடைந்து முறையே கமலினியாரும், அநிந்திதையாருமாகி பார்வதி தேவிக்குத் தாங்கள் முன்செய்த திருத்தொண்டைச் செய்து வருபவருமாயினார்கள்.

''என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.''



## இறையருட்செல்வன் திருமூலநாதன்

திருச்சி மாவட்டம் துறையூரில் பூவை. பி. தயாபரன், நாகவல்லி தம்பதியரின் தவப் புதல்வனாக 19-12-88 அன்று பரணி நட்சத்திரத்தில் பிறந்திருக்கும் இறையருட் செல்வன் தான் மேலே படத்தில் நாம் காணும் ஞானக் குழந்தை திருமூலநாதன்.

நான்கு வயதே நிறையும் திருமூலநாதன் தமிழ், சமஸ்கிருதம், மலையாளம் மற்றும் நீலகிரி மாவட்ட மக்களின் படுகுமொழி ஆகிய 4 மொழிகளில் பாடல்கள் பலவற்றை நன்கு பாடுகிறான்.

இவன் இரண்டரை வயதிலேயே-எழுதிப் பழகும் பள்ளியில் சேர்ந்து பயில்வதற்கு முன்பாகவே சிவபுராணத்தை ஒலியிழை (கேசட்) வழியாகக் கேட்டு ஓதாமல் உணர்ந்து அதனை எல்லோரும் வியக்கப் பாடி காட்டியுள்ளான். அதைப் போல திருப்புகழ் மற்றும் தேவாரப் பாடல்களைப் பிறர்பாடக் கேட்டு, கேட்ட மாத்திரமே மனதில் பதித்து அவற்றைத் திரும்பப் பாடியுள்ளான்.


மூன்று வயது முதலாக திருக்குறளை மனனம் செய்து இன்று நான்கு வயது நிறைவடையும் நிலையில் 1330 திருக்குறள்களையும் ஒப்புவிக்கும் இஞ்ஞானக் குழந்தையைத் ''திருக்குறள் திருமூலநாதன்'' என்று பலரும் போற்றுகின்றனர்.

காஞ்சிப் பெரியவர் ஸ்ரீஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் மற்றும் தொண்டை மண்டல ஆதீனகர்த்தர் உள்ளிட்ட ஆன்றோர்கள் பலரின் பாராட்டுக்களைப் பெற்று, தமிழகத்தின் பல்வேறு முக்கிய நகரங்களில் தன் ஆற்றலை மெய்ப்பித்து வரும் ''திருக்குறள் திருமுறை திருப்புகழ் திருமூலநாதனை' நாமும் வாழ்த்திப் போற்றிடுவோமாக.

இக்குழந்தையின் அரிய திறமையைக் காணவும் போற்றவும் விழையும் அன்பர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

இறையருட் செல்வன்
த. திருமூலநாதன்
187, முத்தையா நிலையம்
துறையூர்-621 010.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M. A., Ph. D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



திரு. மு. குப்புசாமி, எம.காம். அவர்கள எழுதிய ''வடபழநியாண்டவர் அருள் வரலாறு'' நூல் வெளியீட்டு விழா 28.12.92 அன்று அருள்மிகு வடபழநியாண்டவர் ஆலயத்தில் மிகச் சிறப்புற நடைபெற்றது. சமூக நலத்துறை இயக்குநர் திருமிகு கண். தீனதயாளன், ஐ.ஏ.எஸ். அவர்கள் நூலை வெளியிட சென்னை துணை ஆணையாளர் திரு. தி. ஜெயராமன், பி.ஏ.,பி.எல்., அவர்கள் நூலின் முதற்படியைப் பெற்றுக்கொண்டார்கள். திரு ந. சி. இராமமூர்த்தி, டாக்டர் வாசவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, நூல் திறனாய்வு உரையை திருக்கோயில் இதழ் ஆசிரியர் டாகடர் த. ஆமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றினார்கள்.



மயிலை அருள்மிகு திருவள்ளுவர் ஆலயத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் ''மனித நேயத்திற்குப் பெரிதும் பயன்படுவது அறிவுடைமையா ? பண்புடைமையா ?'' எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. கலைமாமணி திருக்குறளார் வீ. முனுசாமி அவர்கள் நடுவராக விளங்க பேராசிரியர் டாக்டர் தெ, ஞானசுந்தரம், பேராசிரியர் டாக்டர் தி. இராசகோபாலன், திருக்கோயில் இதழ் ஆசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம், டாக்டர் அரங்க. இராமலிங்கம், டாக்டர் விஜயலட்சுமி இராமசாமி, பேராசிரியர் தில்லை வில்லாளன் ஆகியோர் இப்பட்டிமன்றத்தில் பங்கேற்றனர். சென்னை துணை ஆணையாளர் திரு. தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்., துணை ஆணையாளர் திரு கு. சிதம்பரம், பி.ஏ., மற்றும் நிர்வாக அதிகாரி திரு தென்னம்பட்டு ஏகாம்பரம் ஆகியோர் இவ்விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தனர்.